பொது நூலகம்
யாழ்ப்பாணம்

# ★ புலிகளுடன் பேசாதவரை எந்தத் தீர்வும் சாத்தியமில்லை

## - முன்னாள் நீதியரசர்

(சென்னை)
விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தாதவரை எந்த ஒரு தீர்வும் சாத்தியம் இல்லையென தமிழக முன்னாள் நீதியரசர் வீ. ஆர். கிருஷ்ணஐயர் தெரிவித்துள்ளார்.

பிரபல பத்திரிகையான 'இந்து' வில் இலங்கை இனப் பிரச்னை தொடர்பாக எழுதிய கட்டுரையொன்றிலே மேற்கண்டவாறு அவர் தெரிவித்துள்ளார்.

அக்கட்டுரையில் மேலும்
(8ம் பக்கம் பார்க்க)

விலை ரூபா 6-00

# ஈழநாடு

EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 37 திருவள்ளுவர் ஆண்டு 2026 புரட்டாதி 27 இதழ் 252
யாழ்ப்பாணம் சனிக்கிழமை 14 10 1995

## கொழும்பு நகரில் அமைதி நிலவுகிறது

(கொழும்பு)
கொழும்பில் பாதுகாப்பும் அமைதியும் நிலவுவதாகப் பொலிஸ் உயர் அதிகாரி கொட்டகதெனியா தெரிவித்துள்ளார்.

ஈ. பி. டி. பி. கட்சித் தலைவர் டக்ளஸ் தேவானந்தா வீட்டின் மீது இடம் பெற்ற குண்டு வெடிப்பிற்கு எதிர்க் கட்சிகள் அரசு கொழும்பில் பாதுகாப்பை ஸ்திரப்படுத்த தவறியதே காரணம் என்பதை சுட்டிக் காட்டியதை அடுத்தே கொட்டகதெனியா மேற்கண்டவாறு தெரிவித்தார். ம-ரி

| | | | | | |
|---|---|---|---|---|---|
| நாளைய [15-10-1995] வாரமலரில் எழுதுகிறார்கள் | ✶ ஈ. த்தமிழரை ஒடுக்குவது, வெளியுறவின் சமன்பாட்டை தருகிறது<br>மு. திருநாவுக்கரசு | ★ ஊமைமேகங்கள் [சிறுகதை]<br>பொன் கணேசமூர்த்தி | ★ புரட்சி எழுகவே [கவிதை]<br>தில்லைச்சிவன் | ★ வாரசாரம்<br>ச. தியாகராசா | ✶ சவாரித்தம்பர் சிரித்திரன் சுந்தர்<br>★ ✶<br>மு. வே. யோ. வாஞ்சிநாதன் |

★ இலங்கையின்

# பொருளாதார சீர்குலைவுக்கு தற்போதைய அரசே காரணம்!

## ரணில் குற்றச்சாட்டு

(கொழும்பு)

**இலங்கையின் பொருளாதாரம் மிகவும் சீர்குலைந்து விட்டதற்கு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா தலைமையிலான பொ. ஐ. மு. அரசே காரணம் என்று எதிர்க்கட்சித் தலைவர் திரு. ரணில் விக்கிரமசிங்கா குற்றம் சாட்டியுள்ளார்.**

ராய்ட்டருக்கு வழங்கிய பேட்டியிலே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் அப்பேட்டியில் தெரிவித்துள்ளதாவது:

வடக்கு மற்றும் கிழக்குப் பகுதிகளில் புலிகளுக்கு எதிராக தொடங்கப்பட்டிருக்கும் போரினால் இலங்கையின் பொருளாதாரம் சரிந்துவிடவில்லை. மாறாக பொருளாதார அடிப்படைகளை ஸ்திரப்படுத்த அரசு தவறியதே பொருளாதார சரிவுக்குக் காரணம்.

அதிகாரப் பரவலாக்கம் திட்டம் குறித்து. சிறுபான்மை மக்களை கவரவேண்டும் என்பதற்காக கொண்டிருக்கும் சந்திரிகாவின் அரசு தற்போது யாழ்ப்பாணத்தில் மக்கள் எதிர்கொண்டுள்ள கடுமையான உணவு மற்றும் மருந்துப்பொருட்கள் தட்டுப்பாட்டினால், ஏமாற்றத்தையே சந்திக்க வேண்டும்.

யாழ்ப்பாண மக்களுக்குத் தேவையான உணவுப்பொருட்களை அரசு உடனடியாக வழங்கவேண்டுமென அரசைக் கேட்டுக் கொண்டதாக கூறியுள்ள ரணில், இராணுவம் புலிகளுக்கெதிரான பாரிய தாக்குதலுக்கு திட்டமிட்டு வருவதைக் குறித்து தான் கவலை கொண்டுள்ளதாக கூறி
(7ம் பக்கம் பார்க்க)

## தொடரும் போர் குறித்து ஜனாதிபதியிடம் கேள்வி

(கொழும்பு)
வடபகுதியில் தொடரும் போர் நடவடிக்கை குறித்து எதிர்க்கட்சி தலைவர் திரு. ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதி சந்திரிகாவிடம் கேள்வி எழுப்பியுள்ளதாக ராய்டர் செய்தியாளர் தெரிவித்தார்.

விடுதலைப்புலிகளுடன் நடத்திய அமைதிப்பேச்சுவார்த்தை குறித்தும் அரசின் அதிகாரப் பரவலாக்கல் திட்டம் குறித்தும் திரு. ரணில் ஜனாதிபதியிடம் கேள்வி எழுப்பியுள்ளார். ரி

## உணவு எடுத்துச்செல்ல வாடகைக்கு கப்பல்

(கொழும்பு)
வடபகுதிக்கு உணவுப் பொருட்களை அனுப்புவதற்கு கப்பல் ஒன்றை வாடகைக்கு பெற்றுக்கொள்வதற்கு அரசு புனர்வாழ்வு, புனரமைப்பு, கப்பல் துறை அமைச்சுக்கு உத்தரவிட்டுள்ளது.

வடபகுதியில் உணவுப் பொருட்களுக்கு பெருந்தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதால் உடனடியாக பொருட்கள் அனுப்புவதற்கு கப்பல் வசதிகள் குறைவாக இருப்பதாலே வாடகைக்கு மேலும் ஒரு கப்பல் அமர்த்துமாறு அரசு உத்தரவிட்டுள்ளதாம். -க-ரி

## மூன்றாம் ஈழப் போரில் இதுவரை 11 விமானப்படை அதிகாரிகள் பலி

(கொழும்பு)
மூன்றாம் ஈழப்போரில் ஒரு குறூப் கப்டன், 6 விங்கொமாண்டர்கள், 2 ஸ்குவாட்டன் லீடர்கள் உட்பட பதினொரு அனுபவம் வாய்ந்த விமானப் படை அதிகாரிகளையும், விமானிகளையும் சிறிலங்கா வான்படை இழந்துள்ளது.

இதேவேளை அன்ரனோவ் விமானம் நீர்கொழும்புகடலில் வீழ்ந்து அழிந்ததில் கொல்லப்பட்ட 5 விமானப் படையின
(7ம் பக்கம் பார்க்க)

## மட்டு, முல்லை, திருமலையில் அறுபது படையினர் பலி

(கொழும்பு)
இராணுவத்தினர் வலிகிழக்கில் இடிமுழக்க இராணுவ நடவடிக்கையை மேற்கொண்டு வரும்வேளையில் கிழக்கு உட்பட ஏனைய பகுதிகளில் விடுதலைப் புலிகளின் தாக்குதல்களில் அறுபது படையினர் கொல்லப்பட்டுள்ள
[7ம் பக்கம் பார்க்க]

## நிறுத்தப்பட்ட உள்ளூர் விமானசேவை இன்று முதல் மீண்டும் ஆரம்பம்

(கொழும்பு)
நீர்கொழும்புக் கடலில் அன்ரனோவ் விமானம் படையினருடன் வெடித்துச் சிதறியதைத் தொடர்ந்து நிறுத்தப்பட்டிருந்த உள்ளூர் விமான சேவை இன்றுமுதல் நடத்தப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

புதிய நடைமுறையின்கீழ் இந்த விமான சேவை இன்று ஆரம்பிக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இப்புதிய நடைமுறையின்படி விமானங்களில் பயணம் செய்வோரின் குறிக்கப்பட்ட விபரங்கள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட வேண்டும் எனக் கேட்கப்பட்டுள்ளது.

மேற்படி உள்ளூர் விமான சேவை இன்று ஆரம்பிக்கப்
(7ம் பக்கம் பார்க்க)

## மண்டைதீவு ஷெல்லுக்கு குருநகரில் ஒருவர் காயம்

(யாழ்ப்பாணம்)
மண்டைதீவு இராணுவ முகாமிலிருந்து இராணுவத்தினர் நேற்று பிற்பகல் 3-15 மணியளவில் நடத்திய ஷெல் தாக்குதலில் குருநகரிலுள்ள புனிதஆரோக்கியநாதர் ஆலய முன் மண்டபத்தில் ஜெப வழிபாட்டில் ஈடுபட்டுக்கொண்டிருந்த அந்தோனிப்பிள்ளை இராணி (வயது 44) என்ற பெண் படுகாயமடைந்து யாழ் ஆஸ்பத்திரியில் சிகிச்சைக்காக
(7ம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### பிரம்புப் பின்னல்

சகல விதமான கதிரைகளும் உங்கள் வீட்டுக்கு வந்து பின்னித் தருபவர்கள்: ராஜன் பின்னலகம், 286, ஸ்ரான்லி வீதி, ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம். (ஏ-5374)

### மருதம்

சகல விதமான தட்டச்சு இயந்திரங்கள், ரோணியோ இயந்திரங்கள் சிறந்த முறையில் திருத்திக்கொடுக்கப்படும். மற்றும் தட்டச்சு, ரோணியோ இயந்திரங்கள் வாங்கவும் விற்கவும் 66 மணிக்கூட்டு கோபுர வீதி, ஆஸ்பத்திரி முன்பாக, யாழ்ப்பாணம். (எ-5351)

### மலிவு விற்பனை

ஆண்டு 3, 4, 5, 6, 7, 8 9, 10, O/L, A/L மறைய வினாத்தாள்கள் (Tutes) 50 வீதம் தள்ளுபடி விலையில் விற்பனையாகின்றன, BOND யாழ்ப்பாணம். (ஏ-5382)

### O/L (MATHS)

G. C. E. (O/L)ல் கட்டாய பாடமாகிய கணித பாடத்தினை 28 வருட அனுபவமுடைய ஆசிரியரினால் ஆரம்ப அறிவிலிருந்து 20 நாட்களில் தொடர் 40 மணித்தியாலங்களில் Distinction பெறுபேறடையக் கற்பிக்கப்படும். ஆறுமுகநாதன் 10, கச்சேரி கிழக்கு ஒழுங்கை, லோகேந்திரா வீதி, கண்டுக்குளி. (ஏ-1704)

### விஷேச அன்ரனா

ரூபவாஹினி, மட்ரூஸ் நிகழ்ச்சிகளுக்கு அன்ரனா பொருத்துவதற்கும் வீடியோ கமரா, ரி. வி. டெக், றேடியோக்கள், மணிக்கூடுகள் திருத்துவதற்கும் வீனஸ், டில்கா வாச் அன் றேடியோ வேக்ஸ், 284 ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம் கிளை: பஸ் நிலையம், சாவகச்சேரி. Our Qualified Experienced Technical & Tutorial Staff T. Thanabalasingam B. Sc. (Ceylon) Dip-in Electornic Engineering (Lond) (Specialist in V. C. R. Service) (ஏ-5388)


### மனையியல் பரீட்சை கொழும்பில்

(கொழும்புத்துறை)

கடந்த ஒகஸ்டில் நடந்த ஜி. சி. ஈ உயர்தரப்பரீட்சைக்கான மனையியல் பாடத்தின் செய்முறைத்தேர்வு இன்று 14ஆம் திகதி சனிக்கிழமை கொழும்பில் நடைபெறும் என்று பரீட்சை ஆணையாளர் பரீட்சார்த்திகளுக்கு கடித மூலம் அறிவித்துள்ளார். 154

### மருந்து தட்டுப்பாடு

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டில் உள்ள வைத்தியசாலைகளில் விசர் நாய்க்கடிக்கான தடுப்பு ஊசி மருந்துக்குப் பெரும் தட்டுப்பாடு நிலவுகிறது.

விசர்நாய்க்கடிக்கு இலக்கான பொது மக்கள் உரிய நேரத்தில் விசர்நாய் கடிக்கான தடுப்பூசி மருந்து பெற முடியாதிருப்பதை காணக்கூடியதாக உள்ளது. 162-சி

# ஜேர்மனி கார் விபத்தில் யாழ். வாசிகள் பலி

(பொன்)

ஜேர்மனியில் இடம் பெற்ற கார் விபத்தொன்றில் சிக்கி வேலணையைச் சேர்ந்த இரு சகோதரர்கள் பலியாகியுள்ளனர்.

கடந்த மாத பிற்பகுதியில் இச் சம்பவம் இடம் பெற்றுள்ளது. தமது காரில் இவர்கள் வேலைக்குச் சென்று கொண்டிருக்கும் போது மற்றொரு வாகனத்துடன் இடம்பெற்ற விபத்தின் போதே சகோதரர் இருவரும் ஸ்தலத்திலே உயிரிழந்தனர்.

வேலணை சாட்டி மாதா கோவிலடியைச் சேர்ந்த பஸ்தியாம் பிள்ளை ஜெராட் (வயது-30) பஸ்தியாம்பிள்ளை அலெக் ஸாண்டர் (வயது-45) ஆகிய இரு சகோதரர்களுமே விபத்தில் உயிரிழந்தவர்களாவர். 156-சி

# சமய பாடம் கற்பிக்க 8000 ஆசிரியர் தெரிவு

(கொழும்பு)

மதபோதனைக்கு என 8 ஆயிரம் ஆசிரியர்கள் விரைவில் சேவையில் சேர்த்துக்கொள்ளப்படவுள்ளதாக கல்வி உயர்கல்வி அமைச்சர் றிச்சர்ட் பத்திரான தெரிவித்துள்ளார்.

இந்துசமயம், பௌத்தம், இஸ்லாம் ஆகிய சமய பாடங்களை கற்பிப்பதற்காகவே புதிய ஆசிரியர்கள் சேவையில் சேர்த்துக்கொள்ளப்படவுள்ளனர் என்றும் அடுத்தமாதம் அளவில் இதற்கான விண்ணப்பங்கள் கோரப்படவுள்ளதாகவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை தமிழ்மொழி மூல பாடசாலைகளில் நிலவும் 8000 ஆசிரியர் பதவிவெற்றிடங்களிற்குமுதலில் 5000 ஆசிரியர்கள் மிக விரைவில் சேர்த்துக்கொள்ளப்படவுள்ளதாகவும் திரு றிச்சர்ட் பத்திரான தெரிவித்துள்ளார். ம-சி

# நாளை வெள்ளை பிரம்புதினம்

(யாழ்ப்பாணம்)

நாளை வெள்ளைப்பிரம்பு தினம் (ஒக்டோபர் 15) விழிப்புல வலுவிழந்தவர்களின் ஓர் எழுச்சி நாள்!

'குருடர்' என்றுஒதுக்கி வைத்திருந்த உலகத்தின் குருட்டு நம்பிக்கைகளை புதைகுழிக்கு அனுப்பிவிட்டு புதிய உரத்துடன் இளைய சந்ததியொன்று இங்கேயும் முளைவிடத் தொடங்கியிருக்கிறது.

''நாங்கள் விழிப்புல வலுவிழந்தவர்கள் மட்டும்தான்'' என்று கூறிக்கொள்ளும் இவர்களின் ஆளுமையை வெளிக்கொணர்வதில் கடந்த 7 வருடங்களாக விழிப்புல வலுவிழந்தோர் 'வாழ்வகம்' உடுவிலில் சேவையாற்றி வருவது யாவரும் அறிந்ததே.

உணவு, உடை, வதிவிட வசதி, கல்வி, கலை, கலாசாரத்துடன் தொழிற் பயிற்சி' சுயமாக இயங்கக்கூடிய தன்னம்பிக்கை.

ஆகியவற்றை வழங்கி சாதி சமய பேதமின்றி வலுவிழந்த சிறார்களை வாழவைத்துக் கொண்டிருக்கும் வாழ்வகம் இடம்பெயர்ந்து பல இன்னல்கள் மத்தியிலும் இன்னும் தன் சேவையை இம்மண்ணிற்கு வழங்க திடசங்கற்பம் பூண்டுள்ளது.

ஆகவே வெள்ளைப்பிரம்பு தினமான நாளை உலகம் முழுவதும் பரந்து வாழும் விழிப்புல வலுவிழந்த தோழர்களுக்கு வாழ்த்துச் சொல்வதோடு, இந்த மண்ணிலும் இன்னும் இருட்டுக்குள் வாழ்ந்து கொண்டிருக்கும் சக உறவுகளுக்கும் தன் எழுச்சிக் குரலை தெரிவித்துக் கொள்கிறது.

# யாழ். தபாலகங்களுக்கு முத்திரைகள் எடுத்துவர அனுமதி

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டில் உள்ள தபாலகங்களுக்குவவுனியாவில் இருந்து முத்திரைகளை எடுத்து வருவதற்கு கொழும்பில் பிரதம தபால் திணைக்களம் அனுமதி வழங்கியுள்ளது.

இதனை அடுத்து குடாநாட்டில் உள்ள ஒவ்வொரு தபாலகங்களினதும் தபாலதிபர்கள் வவுனியா சென்று முத்திரைகளை எடுத்து வருவதற்கு முயற்சிகளை மேறகொண்டு வருகின்றனர்.

இதேவேளை வண்ணார்பண்ணை தபாலதிபர் முத்திரைகளை எடுத்து வருவதற்காக வவுனியா சென்றுள்ளார்.

யாழ். பிரதம தபாலதிபர் சு. கோடீஸ்வரனும் அடுத்த வாரமளவில் வவுனியா சென்று முத்திரைகளை எடுத்து வருவார் என்று தபாலக வட்டாரங்கள் தெரிவித்தன. 170-சி

### இன்றைய உதைபந்தாட்டம்

(யாழ்ப்பாணம்)

வலி-கிழக்கு உதைபந்தாட்டச் சங்கம், விளையாட்டுக் கழகங்களிடையே நடாத்திவரும் உதைபந்தாட்டப் போட்டியின் இன்றைய ஆட்டத்தில் சென்-நீக்கிலஸ் கழகம் எதிர் கலைவாணியும், 2வது ஆட்டத்தில் பாடும் மீன் எதிர் சென். மேரிஸ் கழகங்களும் மோதுகின்றன. இப்போட்டிகள் இன்று யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீட மைதானத்தில் நடைபெறும்.

#### விசேட கூட்டம்

மேற்படி சங்கம் தமது விளையாட்டுக்கழகங்களிடையே நாளை ஞாயிற்றுக்கிழமை விசேட பொதுக்கூட்டம் ஒன்றை ஈச்சமோட்டை வீதியில் உள்ள மத்தியஸ்தர் சங்கப்பணிமனையில் காலை 10 மணிக்கு நடாத்தஉள்ளது. வி-சி

### விலை அதிகரிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ் குடா நாட்டில் சைக்கிள் உதிரிப்பாகங்களுக்குப் பெரும் தட்டுப்பாடு நிலவி வருகிறது. இதனால் உதிரிப்பாகங்களின் விலை என்றும் இல்லாதவாறு அதிகரித்துள்ளது. 162-சி

இரண்டாயிரம் ஆண்டளவில் இரண்டுகோடி எம் தேசத்தின் உயர்வுக்கு முன்னோடி

# டக்ளசை கண்காணிக்கவந்த மூவர் பிடிபட்டனராம்

(கொழும்பு)

ஈ. பி. டி. பி. தலைவர் டக்ளஸ் தேவானந்தாவின் நடமாட்டத்தை கண்காணிப்பதற்கு யாழ்ப்பாணத்திலிருந்து அனுப்பப்பட்டிருந்த மூன்று பேரை பொலிஸார் கைது செய்துள்ளனர் என்று ரூபவாஹினி தெரிவித்தது.

இதுபற்றி ரூபவாஹினி மேலும் தெரிவிக்கையில் இந்த மூன்று பேரும் மூன்று மாதங்களுக்கு முன்பே கைது செய்யப்பட்டனர். விசாரணையின் பின் விடுவிக்கப்பட்டனர்.

யாழ்ப்பாணத்தில் இருந்து இன்னும் ஒரு குழு டக்ளஸ் தேவானந்தவை கொலைசெய்வதற்காகக் கொழும்பிற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது என்றும் தெரிவித்தது. ம-சி

# டக்ளஸுக்கு அரசு போதிய பாதுகாப்பு வழங்கவில்லை

(கொழும்பு)

ஈ. பி. டி. பி தலைவர் டக்ளஸ் தேவனந்தா வீடு மீது குண்டுத் தாக்குதல் இடம் பெறுவதற்கு அரசாங்கம் போதிய பாதுகாப்புக்கொடுக்காமையே காரணம் என்று ஐக்கிய தேசியக்கட்சி, பொதுசன ஐக்கிய முன்னணி அரசைக் கண்டித்துள்ளது.

இதேபோன்றே கொழும்பில் உள்ள ஏனைய கட்சித்தலைவர்களினதும் பாதுகாப்பிற்கு அரசு உத்தரவாதமளிக்க வேண்டுமெனவும் சில கட்சிகள் அரசைக்கோரியுள்ளன. ம-சி

# தென்மராட்சிக் கரையில் சுறு மீன் அகப்பட்டது

(சாவகச்சேரி)

தென்மராட்சியில் கோயிலாக்கண்டி கடலோரப் பகுதியில் சுமார் 300 கிலோஎடையிலான 10 அடி நீள சுறுமீன் ஒன்று மீனவர்களின் வலையில் சிக்கியது.

இவ்வளவு பெரிய சுறுமீன் பெரும்பாலும் ஆழ்கடலிலேயே பிடிக்கப்பட்டுவருவது வழமையாகும். மன்னார், முல்லைத்தீவு மற்றும் நாகர்கோவில் கடற்பகுதியிலும் இவ்வளவு பெரிய சுறுமீன்கள் இருந்தபோதிலும் சாதாரண கடற்கரையோரப் பகுதியில் இவ்வளவு பெரிய அளவில் சுறு மீன வலையில் சிக்கியது இதுவே முதல்தடவையாகும்.

இந்த சுறுமீன் நேற்று முன்தினம் சாவகச்சேரி சந்தையில் 13,500/- ரூபா வரை பேரம் பேசப்பட்டது. -55-சி

### கிரிக்கெட் இலங்கை தோல்வி

(ஷார்ஜா)

ஷார்ஜாவில் நடைபெறும் சிங்கர் கிண்ண சர்வதேச ஒரு நாள் கிரிக்கெட் போட்டியில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஆட்டத்தில் பாகிஸ்தான் இலங்கையை 82 ஓட்டங்களால் வெற்றி பெற்றது.

முதலில் ஆடிய பாகிஸ்தான் அணி 50 ஓவர்களில் 7 விக்கெட் இழப்பிற்கு 264 ஓட்டங்களைப் பெற்றது. இதில் அமீர் சொகை 85ம் இன்சமான் உல் ஹக் 69 சலீம் இலாகி 50 ஓட்டங்களைப் பெற்றனர்.

இலங்கை அணி 50 ஓவர்களில் 8 விக்கெட் இழப்பிற்கு 182 ஓட்டங்களையே பெற்றது. இதில் குமார் தர்மசேன 30 ஜெயசூரிய 24 ஓட்டங்களைப் பெற்றனர். சி

### நாடகம் ஒத்திவைப்பு

(யாழ்ப்பாணம்)

இன்று 14ம் திகதி தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினரால் கைதடி நவீல்ட் பாடசாலையில் நடாத்தப்படவிருந்த 'நாமிருக்கும் நாடு நமது' நாடகம் தவிர்க்க முடியாத காரணத்தால் ஒத்தி வைக்கப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளனர். சி.வி


## வானொலி I\C (ஐ. சி.) விற்பனைக்கு

கீழ்வரும் I/Cகள் விற்பனைக்குண்டு

| | | | |
|---|---|---|---|
| BA 5406 | BA 1330 | BA 527 | BA 6209 |
| BA 1332C | BA 3822LS | BA 521 | BA 4236L |
| BA 6238 | BA 532 | BA 6248 | AN 7220A |
| AN 7223 | AN 7146M | AN 7330K | |
| AN 7115E | AN 7147N | AN 7236 | AN7105 |
| AN 7112 | AN 6650 | | |
| CXA 1019S | TBA 120S | CXA 1019M | |
| TBA 820M | CXA 1191S | CXA 1191M | |
| KA 22427 | UPC 1185 | KA 2213 | UPC 1213C |
| KA 2212 | UPC 1263C | KA 2209 | KA 2206 |
| LA 4505 | LA 4100 | LA 4508 | LA 1260 |
| LA 4445 | LA 4160 | LA 4145 | LA 4102 |
| LA 4135 | LA 4595 | LA 4190 | LA 4140 |
| LA 4192 | LA 4101 | | |
| TA 7233 | TA 7227 | TA 7232 | TA 7343 |
| TA 7282 | TA 7325 | TA 7283 | TA 7313AP |
| HA 1392 | STK 4141II | HA 1394 | |

வீனஸ், டில்கா வாச் & றேடியோ வேக்ஸ்

284, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
(வானவில் அருகில்)

கிளை:
பஸ் நிலையம், சாவகச்சேரி.

(எ 5387)

நல்லூர் கிளை நூலகம்.



**மணிவாக்கு**

அறிவுள்ளவர்கள் அறிவற்றவர்களிடம் பரிவுகாட்ட வேண்டும். அறிந்தவன் ஒரு எறும்புக்காகக்கூட தன் உடலையும் தியாகம் செய்யத் தயாராக இருப்பான்.

— சுவாமி விவேகானந்தர்

# நமது நோக்கு

## தமிழரை ஏமாற்ற முடியாது

ஆகாயத்தில் மிக உயரத்தில் இருந்து பிரசுரங்களைப் போடுவது சிறிலங்கா அரசுக்கு தமிழ் மக்களுடன் தளநிலைத் தொடர்பு இல்லாமையையே எடுத்துக் காட்டுகிறது. இது சிறிலங்கா அரசுக்கு நூலிழையில் இருந்த தொடர்பும் அறுந்துவிட்டதையே எடுத்துக் காட்டுகிறது. அதனால் தான் போலும் அத்தியாவசிய உணவுப் பொருட்களை மாதக் கணக்காக குடாநாட்டுக்கு அனுப்பாது, நாலு கப்பல்களில் உணவுப் பொருட்களை அனுப்ப ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது என்று அரசு வானொலி மூலம் பொய்ப்பிரசாரம் செய்கிறது.

குடாநாட்டில் முன்னரும் துண்டுப்பிரசுரங்கள் ஆகாயத்திலிருந்து கொட்டப்பட்டதும் தெரிந்ததே. சமாதானப் போர்வையில் வந்த இந்திய ஆக்கிரமிப்புப் படையினரும், சிறிலங்கா — இந்திய ஒப்பந்தத்தின் நன்மைகளை எடுத்துக்கூறும் வகையில் இந்திய இராணுவம் ஆகாயத்திலிருந்து கவர்ச்சிகரமான படங்களுடன் துண்டுப் பிரசுரங்களைப் போட்டது. என்ன நடந்தது? மக்கள் சிறிலங்கா - இந்திய ஒப்பந்தத்தை ஏற்றுக்கொண்டார்களா? இல்லவே இல்லை. அதில் இருந்த வெறுமையையும் போலித் தன்மைகளையும் மக்கள் விளங்கிக் கொண்டு அமைதியான முறையில் விடுதலைப் புலிகள் இந்திய இராணுவத்திற்கு எதிராக நடாத்திய போராட்டத்திற்கு ஆதரவு வழங்கினர். இந்திய இராணுவமும் தலைகுனிந்த நிலையில் வீடு திரும்பவேண்டியதாயிற்று.

சந்திரிகா அம்மையாரும் எல்லோரும் ஏறிய குதிரையில் சக்கடத்தாரும் ஏறி விழுந்ததுபோல் சிங்கள மக்களிடமே விற்கமுடியாத தீர்வுத் திட்ட யோசனைகளை தமிழ் மக்களிடம் பலவந்தமாக விற்பதற்கு ஆகாய மார்க்கத்தை நாடியுள்ளார். எறிகணை வீச்சாலும், குண்டுத் தாக்குதல்களாலும் மக்களை ஒருபக்கம் கொன்று குவித்துக்கொண்டும், மறுபக்கத்தில் அவர்களை இடம்பெயர்ந்து அல்லோலகல்லப்பட்ட நிலையில் இருக்கும்போது, ஆற்றுப்பட்சத்தில் தீர்வுத்திட்டத்தை மக்கள் ஏற்றுக்கொள்ளுவார்கள் என்று சந்திரிகா கனவு காண்கிறார் போல் தெரிகிறது. இதேபோன்ற சந்தர்ப்பத்தில் இரண்டாம் உலகப்போரின் ஆரம்பத்தில் லண்டன் மாநகரம் ஹிட்லரின் குண்டுத் தாக்குதலால் பேரழிவுக்குட்பட்டிருந்த வேளையில் சேர்ச்சில் ஆற்றிய உரை கீழே தரப்பட்டுள்ளது.

"சலுகை ஏதும் காட்டாயோ என நாம் எதிரிகளிடம் இரந்து நிற்கப்போவதில்லை. அல்லது எதிரி எம் நிலை கண்டு எம்மீது கச்சாதாபம் கொள்வான் என்று கூட நாம் எதிர்பார்க்கவுமில்லை.

எமது நகரங்கள் மீது எதிரி விமானங்களின் குண்டு வீச்சை நிறுத்த ஜேர்மனியருடன் மாநாடு கூட்டி உடன்பாடு காண ஆணை தருவீர்களா என இன்றிரவே லண்டன் மக்களைக் கேட்டால் - அவர்களெல்லாம் ஒருமித்த குரலில் உரத்துச் சொல்லப்போவதெல்லாம் இதுவாகத்தான் இருக்கும்; இல்லை எம்மால் அது முடியாது. ஜேர்மனியர்கள் எமக்கு ஏற்படுத்திய அழிவுகள், இழப்புக்கள் சொல்லொணாதவை. அவைகளுக்கு அவர்கள் எமக்கு கொடுமைகள் இழைத்த அதேவழியில் பாடம் புகட்டுவோம். அதைவிட அதிகமாகவே அவர்கள் வருந்தும்படி செய்வோம். - என்றுதான் சொல்வார்கள்.

அதுமட்டுமல்ல "ஏ ஹிட்லரே! உலகில் நீ இயலுமான அட்டூழியங்கள் அனைத்தையும் குறைவின்றிச் செய்துவிட்டாய். எங்கெல்லாம் பலவீனமான எதிர்ப்பைக் கண்டாயோ அங்கெல்லாம் சொல்லில் அடங்கா வண்ணம் உன் கொடூரத்தை நிகழ்த்திக்காட்டிவிட்டாய்.

ஜேர்மனிய விமானங்கள் கண்மூடித்தனமாக வகைதொகையின்றிக் குண்டுகளை வீசச் செய்தவன் நீ. போரின் ஆரம்ப நாட்களில் போலந்தின் வோர்சோ பட்டுவிட்ட அவலங்கள், சீரழிவுகளை நாம் மறவோம்; ரொட்டர்டாமையில் நீ இழைத்த கொடுமைகளை மறவோம்.

இது போதாதென்று யூகோஸ்லாவியாவின் பெல்கிரேட்டில் நீ மக்களைக் கொன்று குவித்துப் பெரும் படுகொலை செய்தாய். அப்பேரழிவையும் நாம் மறக்கமாட்டோம்; இதேபோன்ற மிலேச்சத்தனத்துடன் ரஷ்ய மக்களுக்கு நீ இழைத்த மனிதப் பேரழிவையும் நாம் அறிவோம்.

நாங்கள் உன்னுடனோ உன்னுடைய கொடுமைகளுக்குத் துணைபோகும் உனது படைகளுடனோ எந்தவொரு உடன்படிக்கைக்கும் அல்லது போர்நிறுத்தத்துக்கும் இணங்கிடமாட்டோம்; நீ உன்னால் முடிந்த கொடுமைகள் அனைத்தையும் செய். நாங்கள் எங்களால் முடிந்த அத்தனை வழிகளிலும் அதைத் தடுத்து முறியடிப்போம்; காலம் சீக்கிரமாகவே எமக்குச் சாதகமாக கனிந்துவிடலாம் - ஏன் இந்தக் கணமே அந்தநிலை எமக்கு ஏற்பட்டுவிடலாம் - என்றும் சொல்வார்கள்."

தமிழ் மக்கள் எத்தனையோ துன்பங்களைக் கண்டவர்கள்; அதற்காக சுதந்திரப் போராட்டத்தைக் கைவிடமாட்டார்கள்.

# யாழ்.மாவட்ட உடனடித் தேவைக்கு ஆயிரம் தொன் மா தேவை

(கொழும்பு)

யாழ்.மாவட்டத்தின் உடனடித்தேவைக்கு ஆயிரம்மெற்றிக்தொன் மா தேவைப்படுவதாக யாழ்.அரச அதிபர் கே பொன்னம்பலம் அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் நாயகத்தை கேட்டுள்ளார்.

கொழும்பில் தங்கியுள்ள யாழ்.அரச அதிபர் இதுபற்றி மேலும் கூறுகையில்; யாழ்ப்பாணக்குடாநாடு முழுவதுமே அகதிமுகாம் போன்று காட்சியளிக்கின்றது. இங்குள்ளவர்களில் 41 வீதமானவர்கள் அகதிகளாகஉள்ளனர்; சுமார் 83,000 குடும்பங்கள் அகதிகளாக வேறு இடங்களில் தஞ்சமடைந்துள்ளன.

என்றுமில்லாத அளவு குடாநாட்டில் ஏற்பட்டுள்ள உணவுப்பஞ்சத்தைநிவர்த்தி செய்ய உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும். சீனி, அரிசி, மா மற்றும் அத்தியாவசியப் பொருட்கள் முற்றாக பாவனைக்கு இல்லை எனவும் தெரிவித்தார். சி

## ★ டாக்டர்களின்

# வேலைநிறுத்தம் ஒருமாதம்நீடித்தாலும் எதிர்கொள்ள அரசு தயாராம்

(கொழும்பு)

டாக்டர்களின் வேலை நிறுத்தம் ஒருமாதத்திற்கு நீடித்தாலும் அதனை எதிர்கொள்ளத்தயாராயிருப்பதாக சுகாதார அமைச்சர் ஏ. எச். எம். பௌஸி சவால் விடுத்துள்ளார்.

தமது கோரிக்கைகள் நிறைவேற்றப்படாத நிலையில் அரச வைத்தியர்கள் சங்கம் நேற்று நண்பகல் முதல் வேலை நிறுத்தத்தில் குதித்துள்ளது.

இந்நிலையில் இவ்வேலைநிறுத்தப்போராட்டத்தை கைவிடுமாறு அமைச்சர் பௌஸி பல தடவைகள் கோரிக்கை விடுத்தும் அது நிறைவேறாமல் போய் விட்டது.

எனவே டாக்டர்களின் இந்த வேலைநிறுத்தம் ஒரு மாதம் வரை நீடித்தாலும் அதற்கு முகம்கொடுக்க தயாராயிருக்கிறேன்; அவர்கள் முன்வைத்துள்ள நியாயமற்ற கோரிக்கைகளுக்கு அரசு ஒருபோதும் அடிபணியமாட்டாதெனவும் அவர் கூறியுள்ளார்.

இதற்கிடையில் வேலைநிறுத்தம் மூலம் மனித உயிர்களை பணயம் வைக்க வேண்டாமெனவும் இந்த வேலை நிறுத்தத்தால் அப்பாவி மக்களே பாதிக்கப்படுவார்கள் எனவும் சில பொது அமைப்புகள் கூறியுள்ளன. சி

# பாதுகாப்புச் செலவு அடுத்த ஆண்டு மேலும் 25 சத வீதத்தால்அதிகரிப்பு

(கொழும்பு)

இலங்கை அரசின் பாதுகாப்பு செலவினம் அடுத்த ஆண்டு 25 சதவீதத்தால் அதிகரிக்கப்படவுள்ளதாக பொருளியல் ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இவ்வாண்டுக்கு பாதுகாப்பு செலவினமாக 2,700 கோடி ரூபாவே ஒதுக்கப்பட்டது. அடுத்த ஆண்டு 3,398 கோடி ரூபாவே ஒதுக்க அரசு திட்டமிட்டுள்ளது. இது இவ்வாண்டைவிட 25 சதவீதத்தால் அதிகரித்துள்ளது.

ஏற்கனவே இவ்வாண்டில் வரவு-செலவுத் திட்டத்தில் துண்டு விழும் தொகையில் 24 வீதம் பாதுகாப்பு செலவுக்கானதாகும். அடுத்த ஆண்டு இவ்வீதம் மேலும் அதிகமாகும்.

கடந்த5 மாதத்தில் போருக்கு மட்டும் 1,600 கோடி ரூபா செலவிடப்பட்டுள்ளது. தொடரும் போருக்காக 5000 கோடி ரூபாவை திரட்டித்தருமாறு ஜனாதிபதி சந்திரிகா கேட்டுள்ளார்.

இந்நிலையில் நாட்டில்பெரும் பொருளாதார நெருக்கடி ஏற்படுவதுடன் வெளிநாட்டுமுதலீடுகளில் பாதிப்பு, வேலையில்லாப்பின்மை அத்தியாவசியப்பொருட்களின் விலை உயர்வு என்பன ஏற்படுமெனவும் பொருளியல் நிபுணர்கள் எச்சரித்துள்ளனர். சி

# பொஸ்னியாவில் போர் நிறுத்தம் அமுலுக்கு வந்துள்ளது!

(லண்டன்)

பொஸ்னியாவில் போரில் ஈடுபடும் தரப்பினர் போர் நிறுத்தத்துக்கு உடன்பட்டு தற்போது அது அமுலாகி வருகிறது.

கடந்த திங்கள் இரவு ஏற்படவேண்டிய போர் நிறுத்தம் இழுபறி நிலையைத் தாண்டி 48 மணி நேரம் பிந்தி புதன் இரவு அமுலுக்கு வந்துள்ளது.

பொஸ்னியாவின் வடமேற்கு எல்லையில் சண்டைநிறுத்தம் ஏற்பட முன் இறுதிப் போர் நடந்துள்ளது.

போரிடும் இரு பகுதியினரும் தங்கள் படையை போர்நிறுத்தத்தை வலுவாகக் கடைப்பிடிக்குமாறு உத்தரவிட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளனர்.

இந்த மாத இறுதியில் ஏற்படவுள்ள அரசியல் தீர்வுக்கு இந்த போர்நிறுத்தம் முறியாமல் பார்த்துக்கொள்ள வேண்டும் என ஆய்வாளர்கள் கூறியுள்ளனர்.

நேட்டோ உயர் ஸ்தானிகர்கள், போர் நிறுத்தத்தைக் கண்காணிக்க துருப்புக்களை அனுப்பும் திட்டத்தை ஆராய்ந்து வருகிறார்கள். இதற்கு ரஷ்யாவின் உதவியும் நாடப்படும் என நேட்டோ அதிகாரிகள் தெரிவித்தனர். இதே வேளை ரஷ்யா 25,000 துருப்புக்களை போர்நிறுத்த உடன்பாட்டைக்கண்காணிக்க அனுப்ப தயாராகவுள்ளதாகத் தெரிவித்துள்ளது. ஆனால் ரஷ்யத் துருப்புக்கள் நேட்டோ அதிகாரிகளின் கட்டளைக்கிணங்க செயற்படமாட்டார்கள் எனவும் ரஷ்யா நிபந்தனை விதித்துள்ளது.

இதேவேளை போரினால் இறுதியில் அகதிகளான 40.000 பொஸ்னிய சேர்பிய பொதுமக்களை பராமரிக்க சர்வதேச செஞ்சிலுவைச்சங்கம் தனது பணியாளர்களை அனுப்பி வைத்துள்ளது.

இறுதி நேரத்தில் பொஸ்னிய முஸ்லிம்கள் சேர்பியர்களை படுகொலை செய்து "இனச் சுத்திகரிப்பு" நடத்தியதாக தெரியவந்துள்ளது. கே-சி

# பாணுக்காக மக்கள் தினமும் அலைகின்றனர்

(யாழ்ப்பாணம்)

பாண் இருக்கிறதா? என்று கேட்டு மக்கள் கடை கடையாய் ஏறி இறங்கி அலைந்து திரிவதை காணமுடிகிறது.

யாழ். குடாநாட்டில் உள்ள வெதுப்பகங்களில் பாண் தயாரிப்பு நிறுத்தப்பட்டதை அடுத்து குடாநாட்டில் பாணுக்கு பெரும் தட்டுப்பாடு நிலவி வருகின்றது. எனினும் சில வெதுப்பகங்கள் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் காலையில் மட்டும் பாண் உற்பத்தி செய்து வருகின்றன.

(5ம் பக்கம் பார்க்க)

# ரயர், ரியூப் விநியோகம்

(மானிப்பாய்)

யாழ் செயலக சிக்கனக்கூட்டுறவுச்சங்கத்தினர் அதன் அங்கத்தவர்களுக்கு திருவுளச்சீட்டு மூலம் சைக்கிள் ரயர், ரியூப்புகளை கட்டுப்பாட்டு விலையில் வழங்கி வருகின்றனர். 71-சி

# அனுமதி அட்டை

(யாழ்ப்பாணம்)

யாழ் பல்கலைக்கழக வருடாந்த வெளிவாரிப் பரீட்சைக்கு (1994) விண்ணப்பித்தவர்களில் முதற்கலை முதல் வர்த்தகப் பரீட்சைக்கு தோற்றும் பரீட்சார்த்திக்கான அனுமதி அட்டைகளை வெளிவாரிப்பதிவுகள் பரீட்சைகள் அலகின் அலுவலகத்தில் 16ம் திகதி திங்கட்கிழமை முதல் பெற்றுக்கொள்ளலாம்.

# பொருளாதார இலக்குகள்

(Economic Objectives)

1. நிறைதொழில் மட்டம்
2. பொருளாதார உறுதிப்பாடு
3. சமத்துவநிலை
4. பொருளாதார வளர்ச்சியும் அபிவிருத்தியும்

## 1. நிறைதொழில் மட்டம்

(Full Employment)

பொருளாதாரம் ஒன்றின் முதலாவது இலக்கு நிறைதொழில் மட்டத்தை அடைந்து கொள்வதாகும். "நிறைதொழில் மட்டம் என்பது வளங்கள் முழுமையாகவும் திறமையாகவும் பயன்படுத்தப்படும் நிலைமையினைக் குறிக்கின்றது'. இதன் கருத்து பூச்சிய வேலையின்மை காணப்படுகின்றது என்பதல்ல; ஏனெனில் ஒரு தொழிலைவிட்டு வேறு ஒரு தொழிலுக்கு மாறுதல், ஓய்வு பெறுதல், இறப்பு வேலை நீக்கம் போன்ற காரணங்களால் குறிப்பிட்டளவில் வேலையின்மைஎன்பதுஎப்பொழுதும் காணப்படும். இது உராய்வு

# மாணவர் பக்கம்

வேலையின்மை (Frictional Unemployment) எனப்படும் இத்தகைய தற்காலிக வேலையின்மையைத்தவிர ஏனைய வகையில் எல்லாவளங்களும் உற்பத்திக்குப்பயன்படுத்தப்படுவதனை நிறைதொழில் மட்டம் என்பது குறிக்கின்றது.

இவ்வகையில் நிறைதொழில் மட்டம் என்பது நடைமுறையில் வேலையின்மை வீதம் 5 வீதமாக அல்லது அதற்குக் குறைவாக இருப்பதனை அதாவது தொழில் வீதம் 95 வீதமாக அல்லது அதற்குக் கூடுதலாக இருப்பதனைக் குறிக்கின்றது;

$$\text{வேலையின்மை வீதம்} - \frac{\text{வேலையற்றோர்}}{\text{தொழிற்படை}} \times 100$$

$$\text{தொழில் வீதம்} - \frac{\text{வேலை செய்வோர்}}{\text{தொழிற்படை}} \times 100$$

## 2. பொருளாதார உறுதிப்பாடு

(Economic Stability)

பொருளாதாரமொன்றின் இரண்டாவது இலக்கு பொருளாதார உறுதிப்பாட்டைப் பேணுவதாகும்.

"விலைமட்டம், உற்பத்தி [வருமானம்] மட்டம் தொழில் மட்டம், சென்மதி நிலுவை, நாணயமாற்றுவீதம் என்பவற்றில் தளம்பல்களைத் தவிர்த்து உறுதிப்பாட்டைப் பேணுவது பொருளாதார உறுதிப்பாடாகும்"

அதாவது

A விலைமட்டத்தளம்பல்களைத் தவிர்த்தல் பணவீக்க பணச்சுருக்க நிலைமைகளைக் கட்டுப்படுத்துவதனைக் குறிக்கின்றது.

B உற்பத்தியிலான வீழ்ச்சியினைத் தவிர்த்து சீரான வளர்ச்சியினை ஏற்படுத்துவது

C தொழிலின்மையைக்குறைத்து நிறை தொழில் மட்டத்தை பேணுவது

D சென்மதி நிலுவையில் தொடர்ச்சியான பற்றுக்குறைகளைத் தவிர்ப்பது அதன் மூலம் வெளிநாட்டுச் சொத்துக்களை மேம்படுத்துவது

E நாணயமாற்று வீதத்தினை தளம்பலின்றி உறுதியாகப் பேணுவது

இவையே பேரினப் பொருளாதார உறுதிக் குறிக்கோளாகும். எந்த ஒரு பொருளாதாரமும் அபிவிருத்தியை அடைந்து கொள்வதற்கு பொருளாதார உறுதிப்பாடு அவசியமாகும்;

## 3. சமத்துவநிலை

(Equity)

பொருளாதாரமொன்றின் மூன்றாவது இலக்கு சமத்துவ நிலையைப் பேணுவதாகும்; "மக்களிடையே சொத்து வருமானம் என்பன நியாயபூர்வமான முறையில் பங்கிடப்படுவதனை சமத்துவ நிலை என்பது குறிக்கின்றது". இதன்படி சொத்து வருமானம் என்பன மக்களிடையே சமமாகப் பங்கிடப்படவேண்டும் என்ற அவசியம் இல்லை; அநேகமானவர்கள் வருமானமானது உற்பத்திக்கு வழங்கிய பங்களிப்புக்கு ஏற்ப வேறுபடுவது நீதியானது எனக்கருதுகின்றனர். ஏனையோர் சமமான வருமான பங்கீடே நீதியானது எனவும் திறமையின்மையை தவிர்க்கவேண்டிய நிலைமைகளில் மட்டும் வருமானம் வேறுபாடுடையதாக அமையலாம் என்கின்றனர்; எப்படியிருப்பினும் சமூக நீதியின்படி (Social Justice) வருமானப்பங்கீட்டில் மாற்றங்கள் இடம்பெறவேண்டும் என்பதே உண்மையாகும்.

## 4 பொருளாதார வளர்ச்சியும் அபிவிருத்தியும்

(Economic Growth and Development)

"நீண்டகாலப் பகுதியில் ஒரு நாட்டின் மெய் உற்பத்தியில் ஏற்படும் தொடர்ச்சியான அதிகரிப்பே பொருளாதார வளர்ச்சியாகும்"

இது நாட்டின் உற்பத்தி இயலளவில் ஏற்படும் அதிகரிப்பினைக்குறிக்கின்றது. எனவே பொருளாதார வளர்ச்சி என்பது உற்பத்திச் சாத்திய வளையியின் வலப்புற நகர்வின் மூலம் காட்டப்படும்.

பொருளாதார வளர்ச்சியானது பொருளாதார வளர்ச்சி வீதத்தின் மூலம் அளவிடப்படுகின்றது. மெய்நியதிகளிலான மொத்த உள்நாட்டு உற்பத்தி அல்லது மொத்ததேசிய உற்பத்தி என்பவற்றின் மூலம் பொருளாதார வளர்ச்சிவீதம் அளவிடப்படுகின்றது. "குறிப்பிட்ட வருட மெய்த்தேசிய உற்பத்தி அதிகரிப்பினை முந்திய வருட மெய்த்தேசிய உற்பத்தியின் நூற்று வீதமாகக் கூறுதலே பொருளாதார வளர்ச்சி வீதம் ஆகும்"

$$\text{பொருளாதார வளர்ச்சிவீதம்} = \frac{\text{குறித்த வருடமெய்த்தேசிய உற்பத்தி அதிகரிப்பு} \times 100}{\text{முந்திய வருடமெய்த் தேசிய உற்பத்தி}}$$

உ+ம்:

| மெய்த்தேசிய உற்பத்தி | மில் ரூபா |
|---|---|
| 1993 | 10000 |
| 1994 | 10750 |

$$\text{1995ன் பொருளாதார வளர்ச்சிவீதம்} = \frac{750 \times 100}{10000} = 7.5\%$$

பொருளாதார வளர்ச்சியின் மூலம் எதிர்பார்க்கப்படும் அனுகூலங்கள்:

A பொருட்கள் சேவைகளின் உற்பத்தி அதிகரிப்பு மக்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்தலாம்;

B உற்பத்தி அதிகரிப்பு மக்களின் வருமானத்தை அதிகரிக்கச் செய்வதன் மூலம் வறுமை குறையலாம்.

C மக்களுக்கு மேலதிக ஓய்வு கிடைக்கலாம்;

D மக்களின் ஆயுள் அதிகரிக்கலாம்;

பிரதிகூலங்கள் (செலவுகள்):

A மேலதிக முதலீட்டிற்கான அமையச் செலவு நிகழ்கால நுகர்வு பின்போடப்படல்

B சூழல் மாசடைதல் போன்ற வெளிவாரி விளைவுகள் (Externalities)

C மீளப்பெற முடியாத வளங்கள் அற்றுப்போதல் உ+ம்: பெற்றோல்

D ஊழியப்படைமீது அழுத்தம்.

பொருளாதார அபிவிருத்தி என்பது பல பரிமாணங்களைக் கொண்ட பரந்த ஓர் எண்ணக்கருவாகும்; பொருளாதார வளர்ச்சி என்பது பொருளாதார அபிவிருத்தியின் ஓர் அம்சம் மட்டுமேயாகும்; பொருளாதார வளர்ச்சி என்பது அளவு ரீதியான அதிகரிப்பாகும். (Quantity) ஆனால் பொருளாதார அபிவிருத்தி என்பது தரரீதியிலான முன்னேற்றத்தைக் குறிக்கின்றது. (Quality)

"ஒரு நாட்டின் தேசிய உற்பத்தி தலா உற்பத்தி அதிகரிக்கும் அதேநேரம்

வருமான ஏற்றத்தாழ்வு குறைதல்
வறுமை குறைதல்
வேலையின்மை குறைதல்
போசாக்குணவு மட்டம்
கல்வி வசதி
சுகாதார மருத்துவ வசதி
வீட்டு வசதி
போக்குவரத்து வசதி
பொழுது போக்குவசதி போன்றன அதிகரித்தல் என்பவற்றின் மூலம் மக்களின் வாழ்க்கைத்தரத்திலான முன்னேற்றமே பொருளாதார அபிவிருத்தி ஆகும்;"

இவ்வகையில் பொருளாதார வளர்ச்சி பொருளாதார அபிவிருத்தி மூலம் மக்களின் வாழ்க்கைத்தரத்தை முன்னேற்றுவதே பொருளாதார மொன்றின் இறுதி இலக்காகும்;

குறிப்பு:

மேலே விளக்கப்பட்ட விடயங்கள் தொடர்பான மேலதிக விளக்கங்கள் பொருளியல் 11 வினாத்தாளிற்குரிய பாட அலகுகளான:

7. பொருளாதார வளர்ச்சியும் அபிவிருத்தியும்

8; பொருளாதாரக் கொள்கைகள்

என்பவற்றில் உள்ளடக்கப்படும்;

# A/L

# பொருளியல்

வே. கருணாகரன்
(B. A. Hons, Dip in Ed)

தேசிய கல்வி நிறுவகத்தில் (N I E) அண்மையில் நடைபெற்ற கருத்தரங்கில் கூறப்பட்ட கருத்துக்களின் அடிப்படையில் இக்கட்டுரை வடிவமைக்கப்பட்டுள்ளது. 1995 தொடக்கம் அமுல்படுத்தப்படும் புதிய பாடத்திட்டத்தில் (அலகு 1.4) பொருளாதார இலக்குகள் குறித்த இவ்விடயம் சேர்க்கப்பட்டுள்ளது. ஏனைய மாணவர்களுக்கும் இவ்விடயம் பயனுடையதாகும்'

### பொதுவிவேகம்

1, 2 3, 4, 5, 6, 7, 8, 9 என்ற எண்களைக் கூட்டியோ, கழித்தோ, பெருக்கியோ, வகுத்தோ செய்ய முடிவில் 100 என்ற விடையை மட்டும் வரச்செய்ய வேண்டும் எண்களின் வரிசையை மாற்றவே கூடாது. எண்களில் எதையும் ஒதுக்கக் கூடாது.

விடையை எமக்கு அனுப்பி வையுங்கள். 5 விதமான விடையுண்டு

### தமிழ் மாமன்ற மொழித்திறன் விருது

(கொழும்புத்துறை)

இருபாலை தமிழ்மாமன்றம் மாணவர்களிடையே நடாத்தி வரும் 'மொழித்திறன் விருது" இவ்வருடமும் நடைபெறவுள்ளது;

இத்தேர்வு ஐந்தாம் ஆண்டு முதல் பதினோராம் ஆண்டு வரை நடைபெறும்;

ஒவ்வொரு வகுப்பிலும் கூடிய புள்ளி பெறும் மாணவர்கட்கு 'மொழித்திறன் விருது' வழங்கிக் கௌரவிக்கப்படும்.

பாடசாலை அடிப்படையில் பரிசுகளும்; புள்ளிகள் அடிப்படையில் சான்றிதழ்களும் வழங்கப்பட உள்ளன;

இப்போட்டி விண்ணப்ப முடிவு திகதி எதிர்வரும் 20ம் திகதி என அறிவிக்கப்பட்டுள்ளது; (154 ரி)

★ கணிதம் பற்றிய வரலாற்றுத் தொடர்

# கணக்கோடு போனால் பிணக்கில்லை

தமிழ் மொழியில் 'கணக்கு' என்ற சொல்லுக்கு ஆன்றோர் பல்வகையான பொருள் கொண்டுள்ளனர்; அது "எண்" அல்லது எண்ணிக்கையைக் குறிக்கும், கூட்டல் கழித்தல், பெருக்கல் என்பவற்றையும் குறிக்கும். வரவு செலவு கணக்குக் குறிப்புக் கணக்குகளையும் காட்டும், கணக்கியல் என்ற கணித சாஸ்திரத்தையும் காட்டும் "கணக்கோடு போனால் பிணக்கில்லை" என்று சொல்வது போல, முறைமை அல்லது ஒழுங்கு என்றும் பொருள் படும்;

### கணக்காயர்

கணக்கற்ற அல்லது கணக்கிலடங்காத கணக்கிலாத்திருக்கோலம் நீ வந்து காட்டினாய் என்று சொல்லும் போது, அளவு அல்லது எல்லை அல்லது முடிவு என்று பொருள்படும். பதினெண் கீழ்கணக்கு என்று வழங்கும் போது அச்சொல் நூல் அல்லது இலக்கியத்தையும், குறிக்கும், கணக்காயர் என்ற இடத்தில் ஆசிரியரையும் குறிக்கும், இக்கணக்கு இப்படிக்கு ஆர் வெல்லுவார் என்ற இடத்திலும் கணக்குத் தீர்தல் என்ற

(5ம் பக்கம் பார்க்க)

நல்லூர் இளை நூலகம்



## உணவுப்பொருள் விநியோகம்

(யாழ்ப்பாணம்)

வலி - கிழக்கில் இருந்து இடம் பெயர்ந்து கொழும்புத்துறை புனித செபமாலை மாதா கோவிலில் தங்கியிருக்கும் மக்களுக்கு மனித முன்னேற்ற நடுநிலையம் உலர் உணவுப் பொருள்களை அன்பளிப்பாக வழங்கியுள்ளது.

இக் கோவிலில் சுமார் 400 குடும்பங்கள்வரை தங்கியுள்ளனர் தேவாலய பங்குத் தந்தை சீ.ஜீ. ஜெயக்குமார் இவ் உணவுப்பொருள்களை வழங்கினார். 170-சி

## மருந்து விநியோகம்

(பண்டத்தரிப்பு)

குருநகர் ஆரசினர் மருந்தகத்திற்கு யாழ் மாவட்ட சுகாதார திணைக்கள மருந்து விநியோகப் பகுதியினர் கடந்த வாரம் இவ் வருட மூன்றும் சந்தாயத்திற்கான மருந்து வகைகளை திணைக்கள வாகனம் மூலம் கொண்டு சென்று விநியோகம் செய்துள்ளனர். இதன் மூலம் இந்த மருந்தகத்தில் நிலவிவந்த மருந்து தட்டுப்பாடு ஒரளவு நீங்கியுள்ளது; 72

## புதிய நிர்வாகிகள்

(யாழ்ப்பாணம்)

யாழ் உதைபந்தாட்ட மத்தியஸ்தர் சங்கத்தின் வருடாந்தப்பொதுக் கூட்டம் கடந்த வாரம் செல் ஜோன்ஸ் கல்லூரியில் நடைபெற்ற போது திரு. டி ஓ. எம் குணசிங்கம் தலைவராக மீண்டும் ஏகமனதாக தெரிவு செய்யப்பட்டார்.

ஏனைய உத்தியோகத்தர்களும் ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டார்கள் அவர்களின் விபரம்வருமாறு:

செயலாளர் எம் பிரான்சிஸ் தனாதிகாரி பி. ஆர். தம்பிநாயகம், உபதலைவர்கள் கிளிபேட் அந்தோனிப்பிள்ளை அ. தேவராசா, வி. திருஞானசம்பந்தர் எஸ். கே. செபஸ்தியாம்பிள்ளை, எம். கே. விமலதாசன் உபகாரியதரிசி எஸ். கனியூட் ஆறுபேர் கொண்ட நிர்வாக உறுப்பினரும் தெரிவு செய்யப்பட்டனர். வி-சி

## இராசி பலன்

14-10-1995

சனிக்கிழமை

[தமிழுக்கு புரட்டாதி 27]

ஷஷ்டி வைகறை 5-20வரை மிருகசீடம் ந இ. 12-43 வரை சித்தயோகம் இராகுகாலம், காலை 9-02 முதல் 10-32 வரை சுபவேளை மாலை 3-02 முதல் 4-32 வரை

மேடம்: தொழில் கௌரவம், தெய்வசிந்தனை, அறிஞர் சந்திப்பு.

இடபம்: பழைய நினைவுகள் தொழில் மந்தம், அலைச்சல்.

மிதுனம்: முயற்சி சாதகம். பெண் வழி உதவி, தற்பெருமை;

கடகம்: வயோதிபர் அறிவுரை, சயனசுகம், பணவரவு

சிங்கம்: நினைத்தது கைகூடல், சுபச்செலவு' பயண முயற்சி.

கன்னி: உறவினர் சங்கமம், புதிய திட்டம், மனநிறைவு.

துலாம்: வீண் சச்சரவு, கண்டிப்பு, குடும்பயோசனை;

விருச்சிகம்: அமைதி குன்றல், பணக்கஸ்டம், வேண்டாத உறவு.

தனுசு: தவறை உணர்தல், தெய்வீகப்பணி. இனசன மகிழ்ச்சி.

மகரம்; நண்பர் வருகை, கலந்துரையாடல், பகைமை நீங்கல்;

கும்பம்: அகங்காரம், சகோதர விரோதம், வைத்திய செலவு;

மீனம்: காரியதாமதம், மனைவி துயர், மனச்சஞ்சலம்;

— ஜோஸ்யர்

## கணிதம்

[4ம் பக்கத் தொடர்ச்சி]

இடத்திலும் வழக்கையும் குறிக்கும். தமிழ் நெடுங்கணக்கு என்னும் போது எழுத்துவரிசையைக் குறிக்கும்.

இவ்வாறு உலக வழக்கிலும் செய்யுள் வழக்கிலும் இச்சொல் பல பொருட்களில் தொன்று தொட்டு கையாளப் பட்டுவருகின்றது. இதிலிருந்து கணக்கானது வாழ்க்கையின் எல்லா நிலைகளிலும் ஊடுருவி நிற்பது விளங்கும்.

கணிதம் என்பது கூட்டல் கழித்தல் பெருக்கல் வகுத்தல் வர்க்கம், வர்க்க மூலம் கனம், கனமூலம் என்ற கணக்கு வகைகளையும் கணிதசாஸ்திரத்தையும் சோதிடத்தையும் திருக்கணித பஞ்சாங்கம் கணிக்கப்பட்டதையும் 'கணித தமிழ்புகழ்' எனனுமிடத்தில் அளவு என்ற பொருளையும் குறிக்கும்.

இவற்றிலிருந்து கணக்கு. கணிதம், என்ற சொற்கள் எண் அளவு வரையறை, ஒழுங்கு முறை. போன்ற திட்டவட்டமான மதிப்பீடுகளை காட்டுவன என்று கொள்ளலாம். இத்தகைய மதிப்பீடுகள் பொருள்களுக்கு மட்டுமல்லாமல், சொல்லுக்கும் செயலுக்கும் கூட பொருந்தும். பண்டையமக்கள் பொருட்களை கையாளத் தொடங்கியபோது அவற்றை எண்ணியும் அளந்தும் ஒரு வரையறைக்கு(ட்)படுத்தி மதிப்பிட்டுணரத் தொடங்கினார்கள். இதனால் இதை கணக்கு அல்லது கணிதம் என வரத் தொடங்கியது.

பொருட்களை மதிப்பீட்டறிதலுக்கு அளந்தறிதல் என்று பெயர் உண்டு. அவ்வாறு அளப்பது நான்கு வகைகளில் அடங்கும். அவை எண்ணல் எடுத்தல் முகத்தல், நீட்டல் என்பனவையாகும் நாம் சிலபொருட்களை எண்ணி அறிகிறோம். சிலபொருட்களை நிறுத்து அறிகின்றோம். சில பொருட்களை நீட்டி அறிகிறோம்: இவ்வாறு அளப்பதற்குமக்கள் கருவிகளை கண்டு பிடித்தனர் அவை அளவைகள் எனப்பட்டன.

எண்ணுவதற்கு ஒன்று இரண்டு மூன்று என்று தொடங்கும் எண்களையே கருவியாகக் கொண்டனர். இது எண்ணலளவை எனப்படும் தூக்கு திராசு அல்லது துலாக்கோல் ஆகியவற்றை நிறுப்பதற்கு பயன்படுத்தினர். பொருட்களையும் எடைக்கல்லையும், துலாக்கோலின் இரு தட்டுகளிலும் வைத்து அவ்வாறு வைத்தநிலையில் இருந்து எடுத்துப்பார்த்து அளவினை அறிவதால் நிறையென்று இந்த அளவானது பெயர் பெற்றது: ஒரேதட்டினையும், ஒரே கோலினையும் உடையதாகிய கோலின் நிறையைக் காட்டும் கோடுகளைக் கொண்டது தூக்கு எனப்படும். தராசு அல்லது துலாக்கோல் உடன் எடைகளைக்காட்டும் உலோககற்கள் (படிகள்) பயன் படுத்தப்பட்டன. இவை எடைக்கற்கள் அல்லது படிக்கற்கள், அல்லது நிறைக்கற்கள் என வழங்கப்பட்டன.

எடைகள் பலவகைப்படும். பாரம், மடங்கு, விசை, சேர், பலம் தொலா என்பன ஒருவகை, கிலோகிராம் கிராம் எனபன மற்றொரு வகை. பொருட்கள் முகத்தற்கு மரக்கால் படி அல்லது நாழி, உழக்கு ஆழாக்கு போன்றவையும் தற்காலத்து லீட்டர் போன்றவையும் பயன்படுத்தினர்: இனி நீட்டி அளப்பதற்கு கஜக்கோல், அடிக்கோல், மீட்டர் கோல் அளவுநாடா ஆகியவை பயன்படுகின்றன; இவ்வாறு நாகரிக உலகில் அளவைகள் முதன்மை பெறுகின்றன. ஆற்றில் போட்டாலும் அளந்துபோடு என்பது அன்றைய பழமொழி; (வளரும்)

## புலிகளின் குரல் நிகழ்ச்சி நிரல்

1995-10-14

சனி இரவு

8-02 புரட்சிக்குரல்
8-05 நிகழ்வும் பகிர்வும்
8 20 நேயர்கடிதங்கள்
8-30 செய்திகள்
8-40 கவியரங்கம் - நிகழ்ச்சியில் ''தீ சுமந்த தியாக வேள்வியிலே''

1995-10-15

ஞாயிறு காலை

7-02 மாவீரவணக்கம்
7-15 களத்தில் மலர்ந்தவை
7-30 செய்திகள்
7-35 பத்திரிகைச் செய்திகள் அதனைத் தொடர்ந்து
8-00 மணிவரை களத்தில் மலர்ந்தவைநிகழ்ச்சியின் தொடர்ச்சி

## தமிழீழவானொலி நிகழ்ச்சி நிரல்

1995-10-14

சனி மாலை

5-01 சிந்தனைச்சிதறல்
5 02 எழுச்சிகீதம்
5-10 புதியவை
5-15 வேங்கையின் நெஞ்சம்
5-30 அறிவியல் விஞடி விஞ
6-00 சிந்தனைக்குச் சில விஞடிகள்
6-02 என்தெரிவு
6-10 செய்திகள் அதனைத் தொடர்ந்து
6-30 மணிவரை பாமாலை

# 100 மெற்றிக் தொன்

## உ.கிழங்கு எடுத்துவர முயற்சி

(யாழ்ப்பாணம்)

யாழ் குடாநாட்டில் உள்ள விவசாயிகளுக்குத் தேவையான நூறு மெற்றிக்தொன் விதை உருளைக்கிழங்கை கொழும்பிலிருந்து கப்பல் மூலம் எடுத்து வருவதற்கான நடவடிக்கைகள் யாழ்மாவட்ட அரசாங்க அதிபர் திரு. கே பொன்னம்பலத்தால் மேற்கொள்ளப்பட்டு வருவதாக செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

உருளைக்கிழங்கு செய்கையைக் குடா நாட்டில் மேலும் விஸ்தரிப்பதன் நோக்கத்தோடு வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட நல்லஇன உருளைக்கிழங்கு விதைகளை எடுத்து வருவதற்கான நடவடிக்கைகளையே அரச அதிபர் மேற்கொண்டுள்ளார்; 162-சி

## சந்திரிகா, ரத்வத்தையின் கொடும்பாவி எரிப்பு

(யாழ்ப்பாணம்)

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க பாதுகாப்புபிரதிஅமைச்சர் அனுருத்த ரத்வத்த ஆகியோரின் கொடும்பாவிகள் கடந்த புதன்கிழமை இரவு கைதடி நுணுவில் பகுதியில் எரிக்கப்பட்டது.

இப்பகுதியில் இருக்கும் இடம் பெயர்ந்தவர்களினால் இக்கொடும்பாவிகள் இழுத்து செல்லப்பட்டது. பெண்கள் சிறுவர்கள், முதியவர்கள் என நூற்றுக்கணக்கானமக்கள் இக்கொடும்பாவி எரிப்பு நிகழ்வில் கலந்து கொண்டனர்;

இதேவேளை தென்மராட்சிப் பகுதியில் தினமும் தெருக்கூத்து நிகழ்வுகளும் இடம் பெற்றுவருகிறது; ரி-சி

## பாணுக்காக

(3ம் பக்கத் தொடர்ச்சி)

இதேவேளை யாழ்ப்பாணம் பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் வெதுப்பகம் நாள் ஒன்றுக்கு 3,120 பாணை உற்பத்தி செய்து விநியோகித்து வருகின்றது: 170-சி

# கண்ணுக்கு ஒளியழகு கவிதைக்கு மெய்யழகு!

கண்களில் நிறைந்தது
கண்ணீரல்ல; ஆனந்த வெள்ளம்
எங்கிருந்து வந்தார்கள்
இவர்களெல்லாம் ?

சரவணப் பொய்கையில்
உதித்த ஈராறு விழிகளா - அன்றில்
முகத்திரண்டு புண்களாக
கருத்தரித்த மனிதக்கூடுகளா
இல்லையடா !

ஒரவிழிப்பார்வை வஞ்சனைகள்
எதுவுமற்ற தீரர்கள்
நேற்றுவரை அறைகளிலே
முடங்கிக் கிடந்தவர்கள்
வாழ்வகத்தின் உதயத்தில்
வாசலுக்கு வந்தவர்கள்

இன்று வீதியிலே
நடைபயிலும் சித்திரங்கள்
நாளை இந்த நாட்டினையே
ஆளப்போகின்ற அதிசயங்கள்.

வாழ்வகம்; இது
குருடர்கள் பாடசாலையல்ல
விழிப்புல வலுவிழந்தோர்
வாழ்கின்ற ஓர் சோலை
கெலன் கெல்லர்களும்
யாழ்பாடிக் குயில்களும்
குரலெடுத்து கூவுகின்ற
நந்தவனம்
சுந்தரர்கள் பார்வைபெறும்
திருவாரூர்;

கடவுளே ! எனக்கு
இவர்களின் முகங்களை
பார்க்கும் பொழுதெல்லாம்
எவரெஸ்டின் சிகரங்கள்
எங்கோ தொலையில்
தோற்று ஒளிந்துகொண்டன
போல் தெரிகிறதே.

இவர்களின்
முகங்களில் தான்
எத்தனை நம்பிக்கை
விழியை படைத்த பிரமனே
ஏன் இவர்களுக்கு
ஒளியைக் கொடுக்கத்
தவறினாய்.

எங்களூர் நுங்குகளுக்குக் கூட
மூன்று கண்கள் வைத்த நீ
ஏன் இவர்களுக்கு இரண்டு
கண்கள் வைக்கத் தவறினாய்

கம்பனையும் பாரதியையும்
குற்றவாளிக் கூண்டில்
ஏற்றுபவர்களே - ஏன்
பிரமனைப் பிடித்து வந்து
குற்றவாளிக் கூண்டி லேற்றி
இவர்களுக்கு நீதி வழங்கத்
தவறினீர்கள்.

இவர்கள் திருதிராட்டிரர்கள்
என்பதற்காக - உங்களைக்
காந்தாரியைப் போல்
கண்களைக் கட்டிக்
கொள்ளச் சொல்லவில்லையே !
கண்ணப்பன் ஒப்பதோர்
கண் தாருங்கள் என்று
இரத்தக் கண்ணீர்
வடிக்கவில்லையே !
'எங்கள் வழியில் மலர்களை
தூவா விடினும்
முட்களையாவது
விதையாதிருங்கள்'
என்று மட்டுந்தானே
கேட்கிறார்கள்,

'கண்ணுக்கு மையழகு
கவிதைக்கு பொய்யழகு'
என்று சொன்ன கவிஞனைக்
கொண்டு வாருங்கள்
தூக்கிலிட வேண்டும்
அவன் பொய் சொல்லி
விட்டான்
'கண்ணுக்கு ஒளியழகு
கவிதைக்கு மெய்யழகு
நாங்கள் மாற்றி எழுதுவோம்.

கற்பனைக் குதிரையிலே
சவாரிவிடும் கவிஞர்களே
உங்கள் குதிரைகளை
கல்லுண்டாய் வெளியினிலே
கட்டிவிட்டு வாருங்கள்
வரட்டுக் கற்பனைகள்
காய்ந்து போகட்டும்
யதார்த்தத்தைப் பாடுங்கள் -
வாருங்கள் !
வந்து இந்தப் பிள்ளைகளைப்
பாருங்கள்!

— தேன் மொழி

(1994 விழிப்புல வலுவிழந்தோர் ஆண்டு விழாவில் வாசிக்கப்பட்ட கவிதை)

★ நாளை வெள்ளைப் பிரம்பு தினம்

## காசுக் கட்டளைகள் படிவம் தட்டுப்பாடு

(தாளையடி)

பளை அஞ்சல் அலுவலகக் கட்டுப்பாட்டிலுள்ள உப அஞ்சல் அலுவலகங்களில் சிலவற்றில் காசுக்கட்டளை முடிவடைந்துள்ளமையால் பொது மக்கள் காசுக்கட்டளைகள் பெறுவதற்கு மற்றைய உப அஞ்சல் அலுவலகங்களைத் தேடி அலைகின்றனர்.

கடந்த ஒரு வருடத்திற்கு மேலாக அஞ்சல் அலுவலகம் உப அஞ்சல் அலுவலகங்களுக்கு அஞ்சற் திணைக்கள களஞ்சியத்திலிருந்து எந்தவொரு பாவனைப்படிவமும் அனுப்பப்படாமையால் படிவங்களுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. -163

## ஊழியர் ஒழுங்கின்மையால் நோயாளர் பாதிப்பு

(வடமராட்சி)

வல்வை [இந்திராணி] மாவட்ட அரசினர் வைத்தியசாலையில் கடமையாற்றிவரும் ஊழியர்கள் தற்போது அச்சம் காரணமாக கடமைக்கு காலம் தாழ்த்தி வருவதாலும் சிலர் விடுமுறையிலும் உள்ளதாலும் நோயாளர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இவ்வைத்தியசாலைச் சுற்றுடலில் பலாலி ஆட்லறி ஷெல்கள், கடற்படைப் பீரங்கித் தாக்குதல்கள், புக்காரா விமானத்தின் குண்டுவீச்சுக்களைத் தொடர்ந்து இடம்பெற்று வருவதால் இங்கு கடமையாற்றும் ஊழியர்களும் கடமையைத் திருப்திகரமாக செய்யமுடியாதுள்ளது.

இதனால் இவ்வைத்தியசாலைக்கு செல்லும் நோயாளர்களும் சிகிச்சை பெறமுடியாதுள்ளனர். 51-ரி

## ★ தகவல்துறை அமைச்சரை மீறி
# பாதுகாப்பு அமைச்சு தணிக்கையை நடைமுறைப்படுத்தி வருகிறது!

(கொழும்பு)

பொதுசனஐக்கிய முன்னணி அரசாங்கத்தின் தகவல் துறை அமைச்சரின் கையை மீறி பாதுகாப்பு அமைச்சு செய்தி தணிக்கை முறையை நடைமுறைப்படுத்தி வருவதாக தகவலறிந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

செய்தி தணிக்கையினால் தகவல்துறை அமைச்சின் வெளிப்பாட்டு சுதந்திரமும் கூட பாதுகாப்பு அமைச்சின் மிரட்டலிற்குப் பலியாகியுள்ளதாகவும் அவ் வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

இது இவ்வாறிருக்க இந்த யுத்த செய்தி தணிக்கையை கொண்டுவருவதற்காக அரசாங்கத்தில் நடந்த ரகசிய நடவடிக்கைகளும் அமைச்சரவை உறுப்பினர்களது பங்களிப்பும் வேடிக்கையானதும் வேதனை தரத்தக்கதுமானவை என்று கொழும்பு பத்திரிகை ஒன்று தெரிவித்துள்ளது.

அரசாங்க கட்சியின் கூட்டம் கடந்த செப்டெம்பர் 18ம் திகதி நடத்தப்பட்ட போது அதில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா மிகக் கடுமையாக ''பத்திரிகைகளுக்கு தகவல் கொடுக்கின்ற அரசாங்க உறுப்பினர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும்'' என்று தெரிவித்திருந்தார்.

அமைச்சரவை கூட்ட செய்திகள் கூட பத்திரிகைகளில் வெளியிடப்படும் போது அரசாங்க கட்சியின் கூட்டம் பற்றிய செய்திகள் வெளியிடப்படுவதை மட்டும் ஏன் எதிர்க்கிறீர்கள் என சில உறுப்பினர்கள் கேட்ட போது இதற்கு அவர்கள் கிடைத்தால் அவர்களை என்ன செய்ய வேண்டும் என்பது எனக்குத் தெரியும் என உயர்கல்வி அமைச்சர் றிச்சாட் பத்திரண கூறினாராம்.

இவ்வாறு நடந்து முடிந்தது அரசாங்க கட்சி கூட்டம் ஆனால் 20ம் திகதி நடந்த அமைச்சரவைக் கூட்டத்தில் அதுபற்றிய முடிவும் உடனேயே எடுக்கப்பட்டது.

21ம் திகதி நள்ளிரவில் 'யுத்தச் செய்தி தணிக்கை' அமுலுக்கு கொண்டுவரப்பட்டது. இதிலுள்ள முக்கிய விடயம் என்ன வென்றால் 21ம் திகதி நடத்தப்பட்ட அமைச்சரவையின் பத்திரிகையாளர் மாநாட்டில் கூட இதுபற்றி மூச்சு கூட விடவில்லை. அமைச்சரவைப் பேச்சாளர்கள் இறுதி வரைக்கும் இதனை ரகசியமாகவே வைத்திருந்தார்கள்.

இது பற்றி 'ஹிரு' பத்திரிகை தெரிவிக்கையில் அரசாங்கம் பதவியேற்றதிலிருந்துஇந்தஒருவருடத்திற்குள் உத்தியோக பூர்வமாக வெளியிடுவதற்கு முன் வெளித் தெரியாது போன முதற் தீர்மானம் இந்த யுத்தச் செய்தி தணிக்கைஎனக் கூறுகிறது.

## இடம்பெயர்ந்தவர்கள் காய்ச்சலினால் பாதிப்பு

(தாளையடி)

கட்டைக்காடு - வெற்றிலைக்கேணி இராணுவ நடவடிக்கை காரணமாக இடம்பெயர்ந்து தொடுவாய்வாய்க்கால், பூனைத்தொடுவாய், சுண்டிக்குளம் கடலோரக்கிராமங்களில் வசிக்கும் கட்டைக்காடு கிராம மக்கள் புதுவித காய்ச்சலினால்பீடிக்கப்பட்டுள்ளனர்.

ஒரே குடும்பத்தில் இருவர் அல்லது மூவர் இக்காய்ச்சலினால் பீடிக்கப்பட்டுள்ளனர்.

ஆனையிறவு கடல் நீர் ஏரியைக்கடப்பதற்கு எந்தவொரு வசதியுமில்லாததால் நோயாளர்களை அக்கரைக்கு ஐந்து மைல் தூரத்திற்கு இருவர் காவிச்சென்றே கிளிநொச்சி வைத்தியசாலையில்சிகிச்சைக்கு உட்படுத்துகின்றனர். 163-ரி

# அரசின் சீன ஆயுதக் கொள்வனவில் பெரும் ஊழல்கள் கண்டுபிடிப்பு

(கொழும்பு)

சிறிலங்கா அரசாங்கம் சீனாவின் நொறிங்கோ ஆயுத உற்பத்தி நிறுவனத்திடமிருந்து தரகர்கள் மூலம் சுமார் 150 கோடி ரூபாவுக்கு ஆயுதங்களை கொள்வனவு செய்துள்ளதாகவும் இதில் பெரும் ஊழல் இடம்பெற்றிருப்பதாகவும் ''யுக்திய'' பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

இவ்வாண்டின் யூன் மாத காலத்தில் நொறிங்கோ நிறுவனத்திடமிருந்து 100 கோடி ரூபாவுக்கு அரசாங்கம் ஒப்பந்தம் செய்தபோதும் பின்னர் ஹொங்கொங் நாட்டின் நிறுவன 'மொன்றினூடாக மேலும் 250 கோடி ரூபாவுக்கு ஆயுதங்கள் கொள்வனவு செய்யப்பட்டதாகவும் ''யுக்திய'' பத்திரிகை தெரிவித்துள்ளது. கே-ரி

## ஒக். 26 முதல் நவ.01 வரை
# கொடிவாரம்

(யாழ்ப்பாணம்)

சூழலியல் அனர்த்தங்களில் இருந்து எமது பிரதேசத்தை பாதுகாக்கும் நோக்கிலும் மரநடுகையினை துரிதமாக செயற்படுத்துமுகமாகவும் தமிழீழ பொருண்மிய | மேம்பாட்டு நிறுவனத்தின் சூழல் பாதுகாப்புப் பகுதியினர் அக்டோபர் 26ம் திகதி தொடக்கம் நவம்பர் 01ம் திகதி வரையான காலப்பகுதியை மர நடுகைக்கான கொடி வாரமாக பிரகடனப்படுத்தியுள்ளனர்.

தற்போது யாழ் குடாநாட்டில் ஏற்பட்டுள்ள விறகுத் தேவையை பூர்த்தி செய்யும் பொருட்டு மக்களால் பல பயன்தரு மரங்கள் அழிக்கப்பட்டுவருவது குறிப்பிடத்தக்கது.

இந்நிலைமையை கருத்திற் கொண்டு எமது சூழலை பாதுகாக்கும் எண்ணத்தோடு மேற்கொள்ளப்படும் மர நடுகைக்காக கொடிவாரத்தில் பயன் தரு மரங்களை நாட்டி எமது மண்வளத்தை மேம்படுத்த வேண்டும் என தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினர் கேட்டுள்ளனர். -சி

# அரச படைகளின் கொடூரங்களை எழுத்துருவில் ஆவணப்படுத்த வேண்டும்!
### – புதுவை இரத்தினதுரை

(யாழ்ப்பாணம்)

விடுதலை புலிப்போராளிகளிடமிருந்து பொது மக்களைப் பிரித்து அன்னியப்படுத்தப்பட வேண்டிய தேவை ஒன்று அரசுக்கு இருந்தது. இதன் ஒரு கட்ட நடவடிக்கையை சென் பீற்றர்ஸ் தேவாலயப் படுகொலைச்சம்பவமாகும்.

இவ்வாறு விடுதலைப் புலிகள் கலை பண்பாட்டுக் கழகப் பொறுப்பாளர் திரு. புதுவை இரத்தினத்துரை தெரிவித்தார்.

நவாலி சென் பீற்றர்ஸ் தேவாலய முன்றலில் நடைபெற்ற கவிஞர் நாவண்ணனின் ''எத்தனை எத்தனை விழித்துக்கள் வீழ்ந்தன'' நூல் வெளியீட்டு விழாவில் கலந்து கொண்டு மதிப்பீட்டுரை வழங்குகையில் திரு. புதுவை இரத்தினதுரை தனது உரையில் இவ்வாறு தெரிவித்தார்.

எழுத்தாளர் அட்பச்சி மகாலிங்கம் தலைமையில் நடைபெற்ற இவ் விழாவில் அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்; எமது பிரதேசங்களில் அழிவுகள் எவ்வளவோ ஏற்பட்டிருக்கின்றன. தொடர்ந்து அனர்த்தங்கள், அழிவுகள் ஏற்பட்டு வருகின்றன. லீப்போவேட் இராணுவ நடவடிக்கையின் போது இப்புனித ஸ்தலத்தில் பெரியதொரு படுகொலை நடைபெற்றிருக்கிறது. இதற்குக் காரணம் என்ன?

இவ்வாலயத்தில் இரத்தக் கறை அழிவதற்கு முன்னதாக இந்த நூல் வெளியிடப்பட்டிருப்பது இந்நூலாசிரியரின் எண்ணக் கிடக்கைகளை படம் போட்டுக் காட்டுகிறது. எமது மக்கள் மத்தியில் எவ்வளவோ அனர்த்தங்கள், அழிவுகள் கடந்த காலங்களில் நடைபெற்றிருக்கின்றன. யாழ். நகர் எரிப்பு, வல்வைப் படுகொலை, மட்டக்களப்பு அனர்த்தங்கள், குமுதினிப் படகுப் படுகொலை போன்ற பல்வேறு அனர்த்தங்கள் எமது பிரதேசங்களில் நடைபெற்றுள்ளன; இவைகள் யாவும் எழுத்துருவில் வெளியிடப்பட்டு ஆவணப்படுத்த வேண்டிய கட்டாய தேவை எமக்கு ஏற்படுகிறதுஎன்றார். (162 சி)

# மரணப் பத்திரங்கள் வழங்குவதில் தாமதம்
## நிதியுதவி கிடைப்பதும் பாதிப்பு

(வடமராட்சி)

இராணுவ நடவடிக்கையால் இறந்தவர்களின் குடும்பத்தவர்கள் உடன் நிவாரண நிதி பெறுவதில் கஷ்டமடைகின்றனர்.

அண்மைக்கால இராணுவ ஷெல் தாக்குதல், விமானத் தாக்குதல், கடற்படைத் தாக்குதல் போன்றவற்றால் உயிரிழந்த குடும்பத்தவர்களுக்கு இறப்பு நிவாரண நஷ்ட நிதியை விட உடனடி நிவாரண நிதி அரச நிதியில் இருந்து வழங்கப்படுகின்றன.

இந்நிதியைப் பெறுவதற்கு சம்பந்தப்பட்ட வைத்தியசாலை மரணப் பத்திரம் முக்கியமாகவுள்ளது.

மேற்படி பத்திரங்களை பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலை வழங்குவதில் காலதாமதம் காட்டுவதால் தாக்குதலில் கொல்லப்பட்டவர்களின் குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன. -51-ரி

## மரக்காலை உரிமையாளர் பனம் விதை நடுகை

(யாழ்ப்பாணம்)

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன பனைதென்னை வள அபிவிருத்திப் பகுதியினர் ஆண்டுதோறும் பாரிய அளவில் கற்பகச்சோலை பனை நடுகைத் திட்டத்தை மேற்கொண்டு வருகின்றனர்.

இதனடிப்படையில் 1995ம் ஆண்டிற்கான கற்பகச்சோலை பனை நடுகைத்திட்டத்தின் ஆரம்பநாளான செப் 25ம் திகதி பருத்தித்துறை வட்டம் மாலிசந்தி பிள்ளையார் கோவில் வீதியில் 150 பனம்விதைகள் பனைமரக்காலை உரிமையாளர்களினால் நடுகை செய்யப்பட்டது.

இதனைத்தொடர்ந்து அப்பிரதேசத்திலுள்ள ஏனைய பனைமரக்காலை உரிமையாளர்கள் 500 பனம் விதைகள் வீதம் நடுகை செய்வதற்கான நடவடிக்கைகளை பனைமரக்காலை உரிமையாளர்கள் மேற்கொண்டு வருகின்றனர்.

## சங்கானை ஆஸ்பத்திரியில்
# தினமும் 300 நோயாளிகள் சிகிச்சை பெறுகின்றனர்

[மானிப்பாய்]

ஆனைக்கோட்டையில் இயங்கி வரும் சங்கானை அரசினர் வைத்தியசாலையின் வெளிநோயாளர் பிரிவில் தினமும் 300க்கும் அதிகமான நோயாளிகள் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

வலிகாமம் - மேற்கில் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கைகள் காரணமாக தற்காலிகமாக செயற்பட்டுவரும் இவ் வைத்தியசாலையின் பற்சிகிச்சைப் பிரிவிலும் தினமும் 100 பேர் வரை சிகிச்சை பெற்று செல்கின்றனர்.

இதேவேளை சங்கானையிலும் இவ் வைத்தியசாலையின் வெளிநோயாளர் பிரிவில் தினமும் 100 பேர் வரை தற்போது சிகிச்சை பெற்றுச் செல்வதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (71 சி)

## துர்நாற்றம்

(மானிப்பாய்)

யாழ்ப்பாணம் சின்னக்கடைப் பகுதியிலமைந்துள்ள வடிகால்கள் அடிக்கடி துப்பரவு செய்யப்படாமையினால் துர்நாற்றம் வீசுகின்றது.

இதனால் இப்பகுதி மக்களின் சுகாதாரத்துக்கு பங்கம் விளைவிக்கக்கூடிய சூழ் நிலை தோன்றியுள்ளதாக இப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர். 71-ரி

## ஆயிரம் மெ. தொன் மா யாழ். எடுத்து வரப்படும்

(யாழ்ப்பாணம்)

திருகோணமலையில் இருந்து ஆயிரம் மெற்றிக் தொன் கோதுமை மாவை ஏற்றிக்கொண்டு 'ஹபரண' கப்பல் எதிர்வரும் 18ம் திகதி பருத்தித்துறை துறைமுகத்தை வந்தடையவுள்ளது.

யாழ். குடாநாட்டில் மாவுக்கு பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதை அடுத்தே சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் மனிதாபிமான அடிப்படையில் தனது ஹபரண கப்பலில் இக்கோதுமை மாவை ஏற்றி வருவதற்கு முன்வந்துள்ளது குறிப்பிடத்தக்கது. 170-ரி

## கயிறு திரிக்கும் ஆலை மன்னாரில் திறந்துவைப்பு

(யாழ்ப்பாணம்)

வறுமைக் கோட்டின் கீழ் வாழ்கின்ற மக்களுக்கு தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினர் சுய தொழில் ஊக்குவிப்புக் கடன்களை வழங்கித் தொழில் முயற்சிகளை ஊக்குவித்து வருகின்றனர்.

அந்த வகையில் மன்னார் முழங்காவில் பகுதியில் திரு. சி. சிவராசா என்பவர் கிராமிய நிதியத்தினூடாக 6000 ரூபா கடன் பெற்று கயிறு திரிக்கும் உற்பத்தி நிலையம் ஒன்றை ஆரம்பித்துள்ளார்.

இந்நிலையத்தின் திறப்பு விழா அண்மையில் சிறப்புற நடைபெற்றது. இதில் கிராமிய நிதிய முகாமையாளர், கிராமிய உற்பத்திக் குழு வட்டத் தொடர்பாளர், உட்பட பெருமளவு மக்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர். இவ்வாறு தனியார் முயற்சிகள் அதிகரிப்பதன் மூலம் பெருமளவில் வேலைவாய்ப்புக்கள் வழங்கப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது. சி-ரி

## யாழ்ப்பாணப் பகுதியில் கோழித் திருட்டு அதிகரிப்பு

(கொழும்புத்துறை)

கொழும்புத்துறை, மணியம் தோட்டம், அரியாலை, பூம்புகார், வசந்தபுரம், வளன்புரம், எழிலூர்' துண்டி ஆகிய பகுதிகளில் இரவில் இனம் தெரியாத நபர்கள் வேலிகளால், மதில்களால் ஏறிக் கூடுகள் மரங்களில் இருக்கும் கோழிகள், குஞ்சுகளைத் திருடிச் சென்றுள்ளனர்.

அண்மையில் கொழும்புத்துறை புங்கன்குளம் வீதியில் உள்ள திரு. கா. கணேசதாசன் வீட்டில் பத்துக்கோழிகளையும், செவ்விளநீர்களையும் ஆனந்தன் வடலி வீதியில் உள்ள திரு. எஸ் டேவிற் வீட்டில் கூட்டுடன் 35 கோழி, குஞ்சுகளையும் இனந்தெரியாத நபர்கள் இரவில் திருடிச்சென்றுள்ளனர்.

யாழ் குடாநாட்டில் பல பகுதிகளில் பரவலாகத் தற்போது கோழிகள் திருடப்பட்டு வருகிறது. மக்கள் இடம்பெயர்ந்த பகுதிகளிலும் ஆடுகள், கோழிகள் போன்றன திருடப்பட்டுவருகிறன. 154 சி

## யாழ். மாவட்டத்திற்கும் ஊக்குவிப்பு அலவன்ஸ் வழங்க கோரிக்கை

(மானிப்பாய்)

யாழ். மாவட்டத்தில் பணிபுரியும் அரச ஊழியர்களுக்கும் ஊக்குவிப்பு அலவன்ஸ் வழங்குமாறு யாழ் செயலக நலன் புரிச்சங்கம் யாழ் அரச அதிபர் ஊடாக ஜனாதிபதிக்கு மகஜரொன்றை அனுப்பி வைத்துள்ளதாக தெரியவந்துள்ளது.

இந்த ஊக்குவிப்பு அலவன்ஸ் கடந்த ஏப்ரல் மாதம் முதல் 7 மாவட்டங்களுக்கு வழங்க அரசு முடிவுசெய்துள்ளது.

ஆனால் வடபகுதி அரச ஊழியர்கள் இவ் விடயத்தில் புறக்கணிக்கப்பட்டுள்ளது இங்கு குறிப்பிடத்தக்கது. 71 இ

இரத்மலானையில்

## புலிகள் எனக் கூறி கொள்ளையிட முயன்றவர்கள் கைது

(கொழும்பு)

இரத்மலானைப் பகுதியில் புலிகள் எனக் கூறி வீடொன்றில் கொள்ளையிட முயன்ற இராணுவத்திலிருந்து தப்பியோடிய இருவர் கைது செய்யப்பட்டனர்.

இரத்மலானையில் பொருப்பன என்ற பகுதியில் வீடு ஒன்றில் இச்சம்பவம் இடம் பெற்றுள்ளது. இதன்போது மேற்படி இருவரும் பொலிசாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

புலிகள் எனக்கூறி மக்களை ஏமாற்றி கொள்ளையில் ஈடுபட முயன்ற இவர்கள் மேலதிக விசாரணைக்காக பொலிசாரினால் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். -க-ரி

## பயிலுநர் ஆசிரியர்களுக்கு

(யாழ்ப்பாணம்)

கோப்பாய், மருதனார் மடம், வட்டுக்கோட்டை தொலைக்கல்வி நிலையங்களைச் சேர்ந்த பயிலுநர் ஆசிரியர்கள் அனைவரையும் தமக்குரிய நிலையங்களுக்கும் தெல்லிப்பழை தொலைக்கல்வி நிலையப் பயிலுநர் ஆசிரியர்களை இணுவில் மத்திய கல்லூரிக்கும் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு சமூகமளிக்குமாறு சிரேஷ்ட போதனாசிரியர்கள் அறிவிக்கின்றனர். இ

## வடபகுதி மீனவர்க்கு நிவாரணம் வழங்கப்படாதது குறித்து கடற்றொழில் அமைச்சு ஆச்சரியம்

(வடமராட்சி)

வடபகுதி மீனவர்களுக்கு நிவாரணம் கிடைப்பதில்லையா? எனக் கடற்றொழில் அமைச்சில் ஆச்சரியப்படுகிறார்களாம்.

அண்மையில் வடபகுதி மீனவர் நிலை குறித்தும் அவர்கள் நிவாரணங்கள் இன்றிப் படும் இன்னல்கள் குறித்தும் சிறிலங்கா கடற்றொழில் நீரகவளத் துறைத் திணைக்களத்திற்கு நேரில் சென்று வடபகுதி கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க சம்மேளன சார்பில் சமாசத் தலைவர் திரு. எஸ். தவரத்தினம், பொதுமுகாமையாளர் திரு. எஸ். ராஜாராம் ஆகியோர் முறையிட்டபோதே அமைச்சின் பணிப்பாளர் திரு ஏ. ஆர். அத்தபத்து, "என்ன? வடபகுதி மீனவர்களுக்கு மீனவர் நிவாரணம் கிடைப்பதில்லையா?" எனக் கேட்டு ஆச்சரியப்பட்டாராம்.

மேலும் கடற்றொழில் அமைச்சர் திரு. இந்திகா குணவர்த்தனவிடம் மீனவர் நிவாரணம் பற்றி கேட்டபோது அமைச்சர் குணவர்த்தன, இந்த விடயம் பற்றி புனர்வாழ்வு அமைச்சர் திரு அஷ்ரப்பிடம் கதைக்கும்படியும் அதன் பின்பு தான் கூடிய விரைவில் இது குறித்து நல்ல அறிவிப்பைத் தெரிவிப்பதாகவும் தெரிவித்தாராம். 51-இ

## கிழக்கு பல்கலைக்கழகம் நேற்று மூடப்பட்டது

(மட்டக்களப்பு)

கிழக்கு பல்கலைக் கழகம் நேற்று பிற்பகல் 4மணியிலிருந்து மறு அறிவித்தல் வரை மூடப்பட்டுள்ளதாக அரசாங்கம் நேற்று அறிவித்தது.

மீண்டும் பல்கலைக்கழக விரிவுரைகள் ஆரம்பமாகும் திகதி பின்னர் அறிவிக்கப்படும் என்றும் மேலும் தெரிவிக்கப்பட்டது. க-ரி

### மூன்றும்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ருக்கு அரசு பதவி உயர்வுகளை வழங்கியுள்ளது.

தலைமை விமானியான பாக்கியநாதன் விங்கொமாண்டராகவும் பிளைட் லெப்டினன்ட் கருணாரட்ண இருநிலைகள் கூடிய பதவி உயர்வாக விங்கொமாண்டராகவும், பிளைட் லெப். பகுந்ததுல ஸகுவாட்டன் லீடராகவும், பைலட் ஒபிசிரான றிமாட்டின் கிஸ்பிளைங் ஒபிசராகவும், பிளைட் சார்ஜன்ட் கருணாரட்ணவும் பதவிஉயர்த்தப்பட்டுள்ளனர். க

## சவர்க்காரம் விநியோகம்

(பண்டத்தரிப்பு)

பண்டத்தரிப்பு பல நோக்கு கூட்டுறவுச் சங்கம் சங்க உறுப்பினர்களுக்கு பங்கீட்டு அடிப்படையில் சவர்க்காரத்தை சகாய விலையில் அடுத்த வாரம் விநியோகம் செய்யவுள்ளது.

அண்மையில் யாழ் மாவட்ட விவசாய உற்பத்தி நுகர்ச்சி கூட்டுறவுச் சங்கங்களின் சமாஜம் கொழும்பிலிருந்து கப்பல் மூலம் கொண்டு வந்து இச் சங்கத்திற்கு கொடுக்கப்பட்ட வாசனை சவர்க்காரமே இவ்வாறு விநியோகிக்கப்படவுள்ளதாகவும். சங்க உறுப்பினர்களுக்கே இது சங்க கிளைகள் ஊடாக விநியோகம் செய்யப்படுமெனவும் சங்கத்தின் பொது முகாமையாளர் தெரிவித்தார். 72-சி

## சான்றிதழ் வழங்கல்

(வட்டுக்கோட்டை)

யாழ். சைவபரிபாலன சபையினரால் இவ்வாண்டு நடாத்தப் பெற்ற சித்தாந்த பிரவேச பண்டிதர், சித்தாந்த பாலபண்டிதர், சித்தாந்தப் பண்டிதர், தேர்வுகளில் சித்தியடைந்தவர்களுக்கான சான்றிதழ்கள் நாளை ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ள பரிசளிப்பு விழாவில் வழங்கப்படவுள்ளன.

இப்பரிசளிப்பு விழா நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் சைவ பரிபாலனசபைத் தலைவர் திரு. இ. மகேந்திரன் தலைமையில் நடைபெறவுள்ளது. யாழ் கல்வித் திணைக்கள வலயம் ஒன்றின் கல்விப் பணிப்பாளர் திரு இ. சிவானந்தன் சான்றிதழ்களை வழங்குவார். 139-ரி-சி

## சாப்பாட்டு கடைகளில் மக்கள் கூட்டம் அதிகரிப்பு

(மானிப்பாய்)

குடாநாட்டிலுள்ள தேநீர்ச் சாலைகள் சாப்பாட்டுக்கடைகள் என்பனவற்றில் தற்போது மக்கள் கூட்டம் அதிகரித்து காணப்படுகின்றது.

யாழ். குடாநாட்டில் மா, பாண் ஆகியவற்றிற்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதைத் தொடர்ந்து பலகார வகைகளைப் பெறுவதற்காக மக்கள் நிறைந்து காணப்படுகின்றனர்

இதேவேளை சில கடைகளில் காலை 8 மணிக்கு முன்பே சகல பலகார வகைகளும் முடிவடைந்து விடுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. 71-இ-ரி

### நிறுத்தப்பட்ட

(1ம் பக்க தொடர்ச்சி)

படுவதையடுத்து பண்டாரநாயக்கா சர்வதேச விமான நிலையம் மற்றும் இரத்மலானை விமான நிலையம் போன்றவற்றுக்கு பலத்த பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது. க ரி

### மண்டைதீவு

(1ம் பக்கத் தொடர்ச்சி)

அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்த ஷெல்லினால் மேற்படி ஆலய யன்னல் பலத்த சேதமடைந்தது. ஆலயத்திற்கருகிலுள்ள சென் ஜேம்ஸ் வித்தியாலயத்தின் ஓடுகளும் சேதப்பட்டுள்ளது. பாடசாலை பிற்பகல் 2 மணியுடன் முடிவுற்று மாணவர்கள் வீடு திரும்பி சென்றதால் எதுவித உயிர்ச்சேதமும் ஏற்படவில்லை.

இதேவேளை மண்டைதீவு இராணுவத்தினர் நேற்றுகாலை 11-15 மணியளவில் மேற்கொண்ட ஷெல்கள் குருநகர் தொடர்மாடி கடற்பகுதியிலேயே வீழ்ந்து வெடித்துள்ளன. இந்த ஷெல் தாக்குதலினால் கரையோரப் பகுதி மக்கள் பெரும் பீதியுற்று காணப்பட்டனர் 170-ரி

## பாதுகாப்பு நிதி கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

சண்டிலிப்பாய் வட்டத்தைச் சேர்ந்த இதுவரை தேசிய பாதுகாப்பு நிதிக்கு ஒப்புதல் அளிக்காத கீழ்க் குறிப்பிடப்படும் கி. சேவகர் பிரிவுகளைச் சேர்ந்த மக்களுக்கும், அப்பகுதிகளில் இடம் பெயர்ந்து வாழும் (ஏனைய) சண்டிலிப்பாய் வட்டத்தை சேர்ந்த மக்களுக்குமான தே. பா. நிதி தொடர்பான கலந்துரையாடல் நடைபெற உள்ளமையால் இக்கலந்துரையாடலில் அப்பகுதிகளைச் சேர்ந்த மக்கள் பங்குபற்றி தங்கள் பங்களிப்பை நல்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

இன்றும் நாளையும் ஆனைக்கோட்டை உயரப்புலம் சாவற்கட்டு பகுதிக்கு காலை 8-30- மாலை 5-30 மணி வரை மானி/ இந்து மகளிர் கல்லூரியிலும், மானிப்பாய் மேற்கு பிரான்பற்று, சண்டிலிப்பாய் மத்தி, மானிப்பாய் தெற்கு பகுதிகளுக்கு இதே நேரத்தில் மானிப்பாய் மேற்கு கிராம சேவகர் அலுவலகம் கட்டுடையிலும்,

16-ம், 17-ம் திகதிகளில் சுதுமலை வடக்கு, சுதுமலை தெற்கு பகுதிகளுக்கு காலை 8-30 - மாலை 5-00 மணி வரை மூளாய் சந்தி தே. பா. நிதி தொடர்பகத்திலும் மானிப்பாய் வடக்கு மானிப்பாய் கிழக்கு பகுதிகளுக்கு இதேநேரம் மானி/ மெமோறியல் ஆங்கில பாடசாலையிலும் பாதுகாப்பு நிதி கலந்துரையாடல் நடைபெறும். -ரி

## பாராட்டு வைபவம்

(நெல்லியடி)

முன்வந்து உதவும் கரங்கள் அமைப்பின் ஆதரவில் அனர்த்த காலத்தில் அல்லலுற்ற மக்களுக்கு, பெரும் சேவையாற்றிய எம். எஸ் எவ் வைத்தியர்கள் இலங்கை செஞ்சிலுவை சங்க தொண்டர்கள் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலை வைத்தியர்கள் ஊழியர்கள் ஆகியோரை பாராட்டும் வைபவம் இன்று சனிக்கிழமை மாலை 3-00 மணிக்கு புலோலி வணிகர் கழக பணிமனையில் நடைபெறவுள்ளது. 160-ரி

## புக்காராவிலிருந்து துண்டுப்பிரசுரம்

(யாழ்ப்பாணம்)

புக்காரா விமானத்திலிருந்து நேற்றும் குடாநாட்டின் பல பகுதிகளிலும் துண்டுப்பிரசுரங்கள் வீசப்பட்டன.

அதிஉயரத்தில் பல தடவைகள் சுற்றி வட்டமிட்ட புக்காரா விமானம் கட்டுக்கட்டாக பல பகுதிகளில் அரச சார்பு துண்டுப்பிரசுரங்களை வீசியது. ரி

### மட்டு. முல்லை

(1ம் பக்க தொடர்ச்சி)

தாக கொழும்பு பத்திரிகை ஒன்று தெரிவித்துள்ளது.

முல்லைத்தீவு கடற்பரப்பில் தரையிறக்க கப்பல் தகர்க்கப்பட்ட தாக்குதலில் 19 படையினரும், மட்டக்களப்பு, முல்லைத்தீவு, அனுராதபுரம், திருகோணமலை ஆகிய பகுதிகளில் நடத்தப்பட்ட தாக்குதல்களில் மொத்தம் அறுபது படையினர் கொல்லப்பட்டதாக அப் பத்திரிகை மேலும் தெரிவித்துள்ளது.

இதேவேளை இடிமுழக்க இராணுவ நடவடிக்கையில் இதுவரை 75க்கு மேற்பட்ட படையினர் கொல்லப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. ரி

### இலங்கையின்

(1ம் பக்க தொடர்ச்சி)

யுள்ளார்.

அரசு முன்னெடுத்துச் சென்ற அமைதிப் பேச்சுவார்த்தையையும், அதிகாரப் பரவலாக்கத்தையும் கடுமையாக கண்டித்த அவர் அமைதிப் பேச்சுவார்த்தையில் புலிகள் நேர்மையைக் கடைப்பிடிக்க தவறியதாகக் கூறும் அரசு, தகுந்த முறையில் அமைதிப் பேச்சுவார்த்தையை வழி நடத்திச் செல்லவில்லையென்றும் கூறினார்.

போரின் மூலம் அமைதியை கொண்டு வருவதாகக் கூறும் அரசின் அரசியல் புரிந்துணர்வை தம்மால் புரிந்துகொள்ள முடியாதது என்றும் அவர் மேலும் தெரிவித்தார். ம-ரி

# தமிழர்கள் ஏமாற்றப்பட்டதாலேயே தலைவர் பிரபாகரன் தோன்றினார்

## - பௌத்த தேரர் கருத்து

(கொழும்பு)

மாறி மாறி வரும் சிங்கள அரசுகளினால் தமிழ் மக்கள் ஏமாற்றப்பட்டதாலேயே பிரபாகரன் தோன்றினார் என்று காலி சங்க நாயக்க தேரர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

அதிகாரப் பரவலாக்கல் யோசனை தொடர்பாக மாத்தறையில் இடம்பெற்ற கூட்டமொன்றில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது:

சிங்கள தமிழ் தலைவர்கள் அன்று இந்தப் பிரச்சினையை தீர்த்திருந்தால் தமிழ் இளைஞர்கள் ஆயுதம் ஏந்த வேண்டிய நிலை வந்திருக்காது.

பௌத்த பிக்குகள் கடந்த நாற்பது ஆண்டுகளாக கூச்சல் போராட்டம் நடாத்தி கண்ட பயன் எதுவுமில்லை. இவர்களின் இலவாத போக்கினால் பண்டாரநாயக்க கொலைப் பட்டதும் தமிழ் மக்கள் பாதிக்கப்பட்டதும் தான் கண்ட மிச்சம்.

சில பௌத்த பிக்குகள் தமது மனச்சாட்சியைக் கொன்று விட்டு செயற்படுகிறார்கள். 2500 ஆண்டுகளுக்கு முன் புத்த பிரான் மேற்கொண்ட அதிகாரப்பரவலாக்கலை கூட அவர்கள் மதிப்பதாக இல்லை என்றும் அவர் மேலும் கூறினார். -ரி

# வைத்தியர் வேலைநிறுத்தம் நோயாளர் பாதிப்பு

(கொழும்பு)

அரசாங்க வைத்தியர்கள் நேற்று வேலைநிறுத்தத்தில் குதித்ததினால், நோயாளர்களுக்கு பெரும் பாதிப்பு ஏற்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

700 ஆஸ்பத்திரிகளில் கடமை புரியும் 5000 மருத்துவர்களில் 3600 பேர் வேலை நிறுத்தத்தில் இறங்கினர். இதனால் நாடு பூராவும் உள்ள ஆஸ்பத்திரிகளில் ஸ்தம்பித நிலை ஏற்பட்டுள்ளது.

அரசாங்க வைத்திய அதிகாரிகள் சங்கம் நேற்றுக்காலை 8-மணிக்கு ஆரம்பித்த வேலை நிறுத்தம் இன்று காலை 8 மணி வரை நீடிக்கும். அனுராதபுரம் பொலநறுவை, அம்பாறை மாவட்டங்களில் உள்ள வைத்தியசாலைகளும், கொழும்பிலுள்ள சில வைத்தியசாலைகளின் பிரிவுகளும் இந்த வேலை நிறுத்தத்தில் பங்குபற்றமாட்டாது என அறிவிக்கப்பட்டுள்ளது.

சுகாதார சேவைக்கும், அரசாங்கத்துக்கும் முட்டுக்கட்டைகளை ஏற்படுத்தும் முகமாகவே இந்த வேலை நிறுத்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது என்று சுகாதார அமைச்சர் பௌஸி நேற்று பத்திரிகையாளர்களிடம் தெரிவித்தார். -வி-மரி

### ஹபரண கப்பலில்

# யாழ். வைத்தியசாலைக்கு எரிபொருள் வருகிறது

(யாழ்ப்பாணம்)

சர்வதேச செஞ்சிலுவை சங்கத்தின் ஹபரண கப்பலில் யாழ். போதனா வைத்தியசாலைக்கான எரிபொருள்கள் எடுத்து வரப்படுவதாக யாழ். போதனா வைத்தியசாலையின் நிர்வாக அதிகாரி கே. நாகலிங்கம் நேற்றுத் தெரிவித்தார்

கடந்த செப்ரம்பர் மாதத்திற்கான கோட்டா எரிபொருளே ஹபரண கப்பலில் எடுத்துவரப்படுவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இக்கப்பல் எதிர்வரும் 18ம் திகதி புதன்கிழமை பருத்தித்துறை முகத்தை வந்தடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. 170-ரி

# 'ஜெ'யின் சகோதரர் மாரடைப்பால் காலமானார்

(சென்னை)

தமிழக முதல்வர் செல்வி ஜெயலலிதாவின் சகோதரரான ஜெ. ஜெயக்குமார் மாரடைப்பால் நேற்று சென்னையில் காலமானார்.

49 வயதான இவர் சிறிது காலம் நோய்வாய்ப்பட்டிருந்தார். முதல்வர் ஜெயலலிதா சகோதரரின் இல்லம் சென்று மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினார்.

இவரது இறுதிச்சடங்கு இன்று நடைபெறுமென தெரிவிக்கப்படுகிறது. கரி

# அரசு மீதான அழுத்தத்திற்கு அ/சா. நிறுவனங்கள் நடவடிக்கை

(கொழும்பு)

அரசசார்பற்ற நிறுவனங்கள் மீது ஆளும் சந்திரிகா தலைமையிலான அரசாங்கம் கொண்டுவரவுள்ள கட்டுப்பாடுகளை எதிர்த்து சர்வதேச ரீதியில் அழுத்தம் கொடுக்க அவ்வமைப்புகள் தீர்மானித்துள்ளதாக ''லங்காதீப'' பத்திரிகை தெரிவித்துள்ளது.

அரசசார்பற்ற நிறுவனங்களை கட்டுப்படுத்த சமூக சேவை நிறுவனங்களை பயன்படுத்த அரசாங்கம் திட்டமிட்டு வருவதையடுத்தே மேற்கண்ட முடிவுக்கு அரசசார்பற்ற நிறுவனங்கள் வந்துள்ளதாக 'லங்கா தீப' மேலும் தெரிவித்துள்ளது.

இது சம்பந்தமான மாநாடு ஒன்றை அரசசார்பற்ற நிறுவனங்கள் அண்மையில் நடத்தியுள்ளதாகவும் இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் வெளிநாட்டமைச்சர்களை சந்தித்து இது விடயம் தொடர்பாக அழுத்தம் கொடுக்கப் போவதாக மாநாட்டில் முடிவெடுக்கப்பட்டதாகவும் அப்பத்திரிகை தெரிவித்துள்ளது. க-ரி

# பதவி உயர்வு பெற்றவர் மாரடைப்பால் மரணம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் நேற்றுக்காலை பரிதாபகரமான மரண சம்பவம் ஒன்று நிகழ்ந்துள்ளது.

பல்கலைக்கழக தாவரவியல் பீட தொழில் நுட்பவியலாளர் ரி. கதிர்காமநாதன் (வயது-55) என்பவரே இவ்வாறு மரணமானவராவார். அவருக்கு பதவியுயர்வு வழங்கப்பட்டு அப்பதவியை பொறுப்பேற்ற சில நிமிடங்களின் பின் மாரடைப்பால் மரணமானார்.

பல்கலைக்கழக மேல்மாடிக்குச் சென்று பதவியுயர்வைப் பெற்று திரும்பிய சமயம் திடீரென மயங்கி விழுந்து இவர் மாரடைப்பால் மரணமானார் என்று தெரிவிக்கப்பட்டது. -170-71-ரி

# ஆவரங்கால் கிழக்கில் ராணுவம் வீடுகள் எரிப்பு

(சாவகச்சேரி)

ஆவரங்கால் கிழக்குப் பகுதியான மணல்தறைப் பகுதியில் உள்ள நுணவில் குளத்தடியில் சிறிலங்கா இராணுவத்தினர் வீடுகள் எரிப்பில் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் காலை சிறிலங்கா இராணுவத்தினர் மேற்படி பகுதிகளில் அமைந்துள்ள குடியிருப்புக்கள் மீது புல்டோசர் மற்றும் செயின் புளக் மூலம் கட்டடங்களைத் தகர்த்தும், வீடுகள் மற்றும் உடைமைகளைத் தீயிட்டுக் கொளுத்தியும் உள்ளனர்,

மேற்படி பகுதிகளில் அமைந்துள்ள கிராமங்களில் வீடுகள் தீப்பற்றி எரிவதை நேற்று முன் தினம் புத்தூர் கிழக்குப் பகுதிக்குச் சென்று வந்தவர்கள் நேரடியாகப் பார்த்ததாகக் கூறினர். ஆவரங்கால் கிழக்குப் பகுதிகளில் உள்ள பெரும்பாலான வீடுகள் உடைக்கப்பட்டும், எரிக்கப்பட்டும் உள்ளன. மேற்படி பகுதிகளில் தங்கள் வீடுகள் எரிவதை புத்தூர் கிழக்குப் பகுதியில் நின்று ஆவரங்கால் பகுதி மக்கள் பார்த்துள்ளதாகத் தெரிவித்தனர். 155-ரி

# மாகோ கப்பலில் தபால் பொதி வருகிறது

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்திற்கு மண்ணெண்ணை பரல்களை ஏற்றிவரும் "மாகோ'' கப்பலில் ஒரு தொகுதி தபால் பொதிகளும் எடுத்துவரப்படும் என்று யாழ். பிரதம தபாலக அதிகாரி நேற்று தெரிவித்தார்

கடற்படையினரால் சோதனை செய்யப்பட்டு முடிக்கப்பட்ட தபால் பொதிகளே இக்கப்பலில் எடுத்து வரப்படவுள்ளன.

இம்முறை வரும் தபால் பொதிகளில் வெளியூர் மற்றும் பதிவு தபால் என்பன எடுத்து வரப்படும் என எதிர் பார்க்கப்படுகின்றது

இதேவேளை யாழ். மாவட்டத்திற்கான தபால்கள் கொழும்பில் தேங்கி நிரம்பி கிடப்பதாக கொழும்பு தகவல் ஒன்று தெரிவிக்கின்றது.

தபால்களை படையினர் ஆமை வேகத்தில் பரிசோதனை செய்து வருவதும் மற்றும் வடக்கிற்கான கப்பல் தாமதமுமே இத்தேக்கத்திற்கு காரணம் என்று தெரிவிக்கப்படுகிறது. 17-ஜிரி

### புலிகளுடன்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவிக்கையில்: அரசியல் தீர்வுதான் இலங்கை இனப் பிரச்சினையை முடிவுக்குக் கொண்டுவர ஒரே வழி என்றும் தெரிவித்துள்ளார்.

திரு. கிருஷ்ணஐயர் மனித அடிப்படை உரிமைகள் சார்ந்த நடவடிக்கைகளில் பெரும் பங்கை வகித்து வருபவர் என்பதும் குறிப்பிடத்தக்கது. க-ரி

# புத்தூரில் வீடு பார்க்கச் சென்ற 15 பொதுமக்கள் இராணுவத்திடம் சிக்கினர்

(சாவகச்சேரி)

புத்தூர் கிழக்குப் பகுதிக்கு நேற்று முன்தினம் வீடுகளைப் பார்க்கச் சென்றவர்கள் மீது இராணுவத்தினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர். அதிகாலை இப்பகுதிக்குச் சென்ற மூவரைக் காணவில்லை எனவும் கூறப்படுகின்றது.

புத்தூர் கிழக்கு மதவடியில் இராணுவத்தினர் கடையொன்றில் சாரம், சேட்டுக்கள் அணிந்த நிலையில் அவர்களே பதுங்கியிருந்து, வீடுகளைப் பார்க்கச்செல்வோர் மீது கண்டபடி துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்கின்றனர் எனவும் இதுவரை மட்டுவிலிலிருந்து புத்தூர் கிழக்குப் பகுதிக்குச் சென்றவர்களில் 15க்கும் மேற்பட்டவர்கள் இராணுவத்தின் பிடிக்குள் சிக்குண்டுள்ளதாக கூறப்படுகிறது.

இதேவேளை வலி-கிழக்கில் இராணுவத்தினர் நேற்று குடியிருப்புக்கள் மீது ஷெல் தாக்குதல்களையும், துப்பாக்கிப் பிரயோகங்களையும் மேற்கொண்டனர். -155-ரி

# வடமராட்சி நோக்கி வியாழன் இரவு ஷெல்வீச்சு

(நெல்லியடி)

பலாலி இராணுவ முகாம் பகுதியிலிருந்து நேற்றுமுன்தினமிரவு மக்கள் குடியிருப்புகள் மீது எறிகணை வீச்சு நடாத்தப்பட்டது

சுமார் 9-30 மணி முதல் அரை மணி நேரமாக ஏவப்பட்ட ஷெல்கள் உடுப்பிட்டி தொண்டமானாறு, வல்வெட்டித்துறை, கம்பர்மலை போன்ற பகுதிகளில் வீழ்ந்து வெடித்தன.

இப்பகுதி மக்கள் பதுங்கு குழிகளை நாடிச் சென்றமையால் பெரும் உயிர்ச் சேதம் தவிர்க்கப்பட்டது. (160-ரி)

### ஆனையிறவு, வெற்றிலைக்கேணி

# ராணுவ முகாம்களிலிருந்து தொடர் ஷெல் தாக்குதல்

(தாளையடி)

ஆனையிறவு, இயக்கச்சி, வெற்றிலைக்கேணி இராணுவ முகாமிலிருந்து கடந்த மூன்று நாட்களாக இரவு வேளைகளில் மக்கள் குடியிருப்புக்களை நோக்கி ஷெல்கள் ஏவப்படுவதுடன் முகாம்களை அண்டிய இராணுவ வேலிப் பகுதிகளில் துப்பாக்கி வேட்டுச் சத்தங்களும் தொடர்ச்சியாகக் கேட்டன,

நேற்று முன்தினம் மண்டலாய் இராணுவ வேலியை அண்டிய பகுதிகளில் பகல் நேரம் கரியபுகை மேலெழுந்ததைக் காணக் கூடியதாக இருந்தது.

இராணுவத்தினர் தமது பாதுகாப்புக் கருதி அருகிலுள்ள காடுகளை வெட்டி எரித்திருக்கலாம் என நம்பப்படுகிறது. (163-ரி)

# தேசிய பாதுகாப்புநிதி கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

ஏழாலை மேற்கு (ஜே/201) ஏழாலை தென் மேற்கு (ஜே/202) ஏழாலை தெற்கு (ஜே/203) ஏழாலை கிழக்கு (ஜே/204) ஏழாலை வடக்கு [ஜே/205] ஏழாலை மத்தி [206] புன்னாலைக்கட்டுவன் தெற்கு [ஜே/207] புன்னாலைக்கட்டுவன் வடக்கு [ஜே/208] ஈவினை [ஜே/209] குப்பிளான் தெற்கு [ஜே/210] குப்பிளான் வடக்கு [ஜே/211] சுன்னாகம் வடக்கு [ஜே/195] சுன்னாகம் தெற்கு [ஜே/196] சுன்னாகம் கிழக்கு [ஜே/197] சுன்னாகம் மத்தி [ஜே/198] சுன்னாகம் மேற்கு [ஜே/199] கந்தரோடை [ஜே/200] ஆகிய கிராமசேவகர் பிரிவுகளுக்குட்பட்ட மக்களுக்கும் தெல்லிப்பழை உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளுக்குட்பட்ட மக்களுக்குமான கலந்துரையாடல் இன்று சனிக்கிழமை காலை 9 மணி முதல் மாலை 4 மணி வரை உரும்பிராய் அன்னை பூபதி கலையரங்கில் இடம் பெறவுள்ளதால் தேசிய பாதுகாப்பு நிதிக்கு பங்களிப்புச் செய்ய இதுவரை ஒப்புதல் அளிக்காதவர்கள் தவறாது சமூகம் தருமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். -சி

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்கத்தில் உள்ள அவர்களது அச்சகத்தில் 1995-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 14-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News Paper at the General Post Office Sri Lanka under Licence number B/1683618.